தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

ஊரக வளர்ச்சி
மற்றும் ஊராட்சித் துறை

விலை ரூ. 20/-

மலர் 26

இதழ் 01

மே 2024

# முற்றம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்



## வேலை வாய்ப்புகளை அள்ளித் தரும் படிப்புகள்



முனைவர். **ப. செந்தில்குமார்,** இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை.

தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009

**அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,**

மாதந்தோறும் முற்றம் இதழின் வாயிலாக உங்களை சந்தித்து, பல்வேறு கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வது மகிழ்ச்சியைத் தருகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த மகளிர் பல துறைகளில் சிறந்து விளங்குகின்றனர். பெண்களின் பேராதரவைப் பெற்ற மகளிர் திட்டத்தினால், சுய உதவிக் குழுப் பெண்களுக்கும், அவர்களை சார்ந்துள்ளவர்களுக்கும் எண்ணற்ற பெருமைகளும், உதவிகளும் கிடைத்துள்ளது என்பதை யாராலும் மறுக்க இயலாது. இத்திட்டத்தினால் நலிவுற்ற நிலையில் இருந்த பல குடும்பங்கள் பொலிவு பெற்றுள்ளன. பெண்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்ததோடு மட்டுமல்லாது அவர்களது குழந்தைகளின் வாழ்க்கைத் தரமும், கல்வித் தரமும் பன்மடங்கு உயர்ந்துள்ளது.

சுய உதவிக் குழுக்களில் உள்ள லட்சக்கணக்கான பெண்கள் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள அயராது பாடுபட்டு, சமுதாயத்தில் தங்களுக்கென்று ஒரு நிலையான இடத்தினை தக்கவைத்துக் கொள்ள அல்லும் பகலும் உழைத்து தங்களது திறமைகளை வளர்த்துக் கொள்வதோடு மட்டுமின்றி தங்களை சார்ந்துள்ளவர்களுக்கு பெருமைகள் பல சேர்த்துள்ளனர்.

ஆண்களுக்கு நிகராக இன்று சாதனைகள் பலவற்றைப் படைத்து வரும் சுய உதவிக் குழு மகளிர் மேலும் மேலும் பல வெற்றிகளைப் பெற்று, முன்னேற்றத்திற்கான பாதையில் தொடர்ந்து வெற்றி நடை போட வேண்டும்.

தற்போது கோடைக்காலம் என்பதால் வெயிலின் கொடுமை அனைத்துப் பகுதியிலும் எதிரொலிக்கிறது. மக்களின் பயன்பாட்டிற்கும் விவசாயத்திற்கும் நீர் மிகவும் இன்றியமையாதது. எனவே, தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். நமது பிள்ளைகளுக்கும் தண்ணீரின் அவசியம், தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்துவது போன்றவை குறித்து கற்றுத் தர வேண்டும். நாம் மேற்கொள்ளும் இந்த முயற்சி நமக்கு மட்டுமல்ல நமது எதிர்கால சந்ததியினருக்கு பயனளிக்கும் என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

நன்றி... வணக்கம்!!!

அனைவருக்கும் அன்னையர் தினவாழ்த்துகள்!!!

அன்புடன்,

(ப. செந்தில்குமார்)



திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

## அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

அனைவருக்கும் அன்னையர் தினவாழ்த்துகள்!!!

ஏழை எளியவர்களை குழுவாக இணைப்பது, அவர்களுக்கு பயிற்சிகள் வழங்குவது, பயிற்சிக்குப் பின் வேலைவாய்ப்புகள்பெற்றுத் தருவது. சுய தொழில் முனைப்பை ஊக்குவிப்பது, அதற்கான மூலதனத்தை உருவாக்குவது, பொருட்களின் உற்பத்தியை ஊக்குவிப்பது, விற்பனைக்கான வாய்ப்புகளை ஏற்படுத்துவது என பல்வேறு திட்டங்களை தீட்டினாலும், அதனை வெற்றிகரமான திட்டமாக உருமாற்றுவது அத்திட்டத்தை பயன்படுத்தும் பயனாளிகள் தான். அவ்வகையில் சுய உதவிக் குழு இயக்கம் இன்று பெற்றுள்ள மாபெரும் வெற்றிக்கு அடிப்படை நீங்கள் தான்.

தமிழ்நாட்டின் கடைக்கோடியில் வசிக்கும் பெண்கள் கூட இன்று தொழில் முனைவோர்களாகவும், தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்களாகவும் உள்ளதற்கு முழுமுதற் காரணம் சுய உதவிக் குழு இயக்கத்தின் செயல்பாடுகள் என்பதை விட இம்மாபெரும் இயக்கத்தில் இணைந்து அயராது செயல்பட்ட உங்களின் முயற்சிதான் என்பதில் மாற்றுக்கருத்து ஏதும் இல்லை.

உங்களின் செயல்பாடுகள் மற்றவர்களுக்கு வழிகாட்டும் முன்னத்திஏராக என்றும் இருக்க வேண்டும். உங்களுக்கு உதவிட, வழிகாட்டிட தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்றும் துணைநிற்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்பெல்லாம் விடுமுறை என்றாலே உறவினர்களின் வீடுகளுக்குச் செல்லும் பழக்கம் இருந்தது. ஆனால், தற்போது கோடை விடுமுறையில் தங்களது பிள்ளைகளை பல்வேறு பயிற்சி வகுப்புகளுக்கு அனுப்பும் பெற்றோர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

வருடத்தில் ஏறத்தாழ பத்து மாதங்கள் பள்ளிக்கு, கல்லூரிக்கு சென்று வந்த மாணவர்கள் ஒரு மாறுதலுக்காக விடுமுறையில் பல்வேறு இடங்களுக்குச் சென்று வந்தால் அவர்களின் மனநிலை உற்சாகமடையும். இந்தக் கருத்து என்னுடையது மட்டுமல்ல, பல மருத்துவ நிபுணர்களின் கருத்துமாகும். எனவே, கோடை விடுமுறையில் சில நாட்களாவது சுற்றுலாவோ அல்லது உறவினர்களின் வீடுகளுக்கோ சென்று வரலாம். இதனால் உறவுகளின் முக்கியத்துவத்தையும் இன்றைய தலைமுறைக்கு புரியவைக்கலாம்.

என் அருமை சகோதரிகளே, நான் சொல்வதை நீங்கள் புரிந்து கொண்டு, உங்களின் பிள்ளைகளுக்கு கல்வியை தருவதுடன், அவர்கள் மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்ந்திட தேவையானவற்றை உருவாக்கி கொடுத்து, அவர்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழிகாட்டிட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி. வணக்கம்

மீண்டும் சந்திப்போம்...

அன்புடன்,

(ச. திவ்யதர்சினி)



திருமதி. **ஸ்ரேயா பி சிங்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

**அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,**

மாதந்தோறும் உங்களை சந்தித்து, எனது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

ஒரு நாடு முன்னேற வேண்டும் என்றால், அந்நாட்டில் பெண்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். வீடும், நாடும் நலம் பெற வேண்டுமென்றால் அங்கு பெண்களில் நலன் பேணப்பட வேண்டும். நம் நாடு பெண்களின் பெருமையைப் போற்றும் நாடு. பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், அவர்களின் நல்வாழ்விற்காகவும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதில் தமிழ்நாடு என்றுமே முன்னிலை வகிக்கிறது.

பெண்களின் வளமான வாழ்விற்கான திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் அயராது பாடுபட்டு வருகிறது. அனைத்துத் துறைகளிலும் சுய உதவிக் குழுப் பெண்களின் சாதனைகள் தொடர்கின்றன. சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகள் போன்றவற்றின் மூலம் மகளிர் வாழ்வில் மேலும் மேலும் வளம் சேர்க்கும் திட்டங்களை செயல்படுத்திடும் சீரிய பணியில் ஈடுபட்டுள்ள தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், உங்களின் வெற்றிக்கு என்றும் துணைநிற்கும்.

மே மாதம் என்றாலே என் நினைவிற்கு வருவது 10 மற்றும் 12ஆம் வகுப்புத் தேர்வு முடிவுகள் தான். தற்போது பள்ளித் தேர்வு முடிவுகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. தேர்வுகளில் வெற்றி பெற்ற அனைவருக்கும் எனது வாழ்த்துகள். அதிக வேலை வாய்ப்பு, நிறைவான ஊதியம், எதிர்கால பாதுகாப்பு போன்றவைகளைத்தரும் படிப்புகளில் தங்கள் பிள்ளைகளை சேர்க்க வேண்டும் என்பதே பெரும்பான்மை யான பெற்றோர்களின் எண்ணமாக இருக்கிறது.

பிள்ளைகளின் விருப்பங்களுக்கு செவி சாய்க்காமல், தங்களின் விருப்பத்தை அவர்களின் மீது திணிக்கும் போக்கினை பெற்றோர்கள் கைவிட வேண்டும். அதேபோல் பெற்றோர்களின் விருப்பங்களும் நியாயமானவைதான் என்பதை பிள்ளைகள் புரிந்து கொள்ள வேண்டும். படிப்புகளில் உயர்வு தாழ்வு என்ற பேதமின்றி அனைத்தும் சமமே என்பதை அனைவரும் உணர வேண்டும். பொருளாதார வசதிகளை வாழ்க்கையில் பெற்றுத் தரும் ஒரு கருவியாக கல்வியை கருதுவதை தவிர்த்து, வாழ்க்கையை கற்றுத் தரும் கல்வியை, வாழ வழிகாட்டும் கல்வியை பெறுவதற்கு மாணவர்கள் முன்வர வேண்டும். அதற்கு முன்னுதாரணமாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் தங்களின் பிள்ளைகளுக்கு கல்வி குறித்த விழிப்புணர்வை, வாழ்க்கை குறித்த புரிதலை ஏற்படுத்துவது அவசியம்.

எதிர்கால சந்ததியினரின் வாழ்வு வளமாகவும், நலமாகவும் இருந்திட, சுய உதவிக் குழுவினரான உங்களின் பயணம் மேலும் தொடர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி... வணக்கம்.

அன்புடன்,
ஸ்ரேயா
(ஸ்ரேயா பி சிங்)

கவிதை, உடல் நல குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவி குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவி குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.


மின்னஞ்சல் :
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com


tncdwH · Tncdw State
www.Tncdw.org · Tncdwofficial

"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வரும் ஆய்வுகள், ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், செயல் இயக்குநர் ஆகியோர்களின் செயல்பாடுகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்த விபரங்களை தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் டுவிட்டர், இன்ஸ்ட்ராகிராம் மற்றும் முகநூல் பக்கங்களை பின்தொடருங்கள்.."

## குறளும் – பொருளும்

**தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு**

– (குறள்: 396)

தோண்டத் தோண்ட ஊற்று நீர் கிடைப்பதுபோலத் தொடர்ந்து படிக்கப் படிக்க அறிவு பெருகிக் கொண்டே இருக்கும்.

# உள்ளே...



7 வறுமை ஒழிப்பு செயல்பாடுகள்


27 உடல் நலம் காப்போம்...


13 என்ன படிக்கலாம் ?


28 சட்டம் என்ன சொல்கிறது?



22 தினம்...தினம்...


34 சமைப்போம்... சுவைப்போம்


சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவி குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர், முற்றம் மாத இதழ்

தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●
முற்றம்
விலை ரூ. 20/– • மலர் 26 • இதழ் 01 • மே 2024

கௌரவ ஆசிரியர்கள்
திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
தலைமை செயல் அலுவலர்,
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருமதி. **ஸ்ரேயா பி சிங்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
திரு. **எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்

ஆசிரியர் குழு
திருமதி. **க. முத்துமீனாள்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திருமதி. **எஸ். கவிதா,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **நா. அருள்ஜோதி அரசன்,** கூடுதல் இயக்குநர், VKP
திரு. **பி. மந்திராச்சலம்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **ஆர். சங்கர்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **வி. பிச்சை,** கூடுதல் இயக்குநர், NULM

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
நிர்வாக ஆசிரியர்
திருமதி. **பி. எஸ். விஜயலெஷ்மி** பொது மேலாளர்,

நிதி நிர்வாகம்
திரு. **ச. இராஜேந்திரன்,** நிதி ஆலோசகர்,

பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்
திரு. **வா. ராகுலன்,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

துணை ஆசிரியர் : **ஏ. கண்ணன்**
பிழை திருத்துபவர் : **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
கணினி வடிவமைப்பு : **பி.ஆர்.இ குழுமம்**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
**'முற்றம்'**
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

# மக்களுக்கே அதிகாரம்



**அன்புள்ள வாசகர்களுக்கு,**


நமது சுதந்திர இந்திய நாட்டின் 18–வது மக்களவை தேர்தல் 2024– ஆண்டு மார்ச் மாதம் தேர்தல் அறிவிப்பில் தொடங்கி, பல கட்டங்களாக தேர்தல் பணிகள் நடைபெற்று வருகின்றன. அரசியல் கட்சிகள் தேர்தல் அறிக்கைகளை வெளியிடுகின்றனர். தேர்தலில் போட்டியிட பல வேட்பாளர்கள் வேட்புமனுக்களை தாக்கல் செய்து வருகின்றனர். அனல்பறக்கும் பரப்புரைகள் ஓங்கி ஒலித்து வருகின்றன. கருத்தியல் விவாதங்களும், தேர்தல் கணிப்புகளும் ஊடகங்களில் தொடர்ந்த வண்ணம் உள்ளன. முதல் கட்டமாக, தமிழ்நாட்டிலும்ஒருசில மாநிலங்களிலும் வாக்குபதிவு நடந்து முடிந்துவிட்டன. பல மாநிலங்களில், பல கட்டங்களில் வாக்கு பதிவு நடந்துகொண்டிருக்கின்றன. ஜூன் மாதம் 4ம் தேதியினை தேர்தல் முடிவுகளுக்காக நாம் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்து கொண்டிருக்கின்றோம்.

நமது அரசியல் அமைப்பு சட்டத்தின் வழிகாட்டுதலின் படி, நேர்மையுடன் மக்களவை தேர்தலை நடத்துவது தேர்தல் ஆணையத்திற்கு மாபெரும் பணியாகும். நாட்டு மக்களின் நலனுக்காகவும், வளர்ச்சிக்காகவும், பாதுகாப்பிற்காகவும் சட்டங்களையும் திட்டங்களையும் உருவாக்குவதற்காகத்தான் தேர்தல் மூலம் நாம் நமது பிரதிநிதிகளை தேர்வு செய்து, பாராளுமன்றத்திற்கு அனுப்புகின்றோம். எனவேதான் இதற்கு மக்களவை என்கின்ற அழகிய பொருள் உண்டு. தேர்தல்காலங்களில் பிரிவினை உணர்ச்சிகளுக்கு மக்களை அடிமைப்படுத்தி வெற்றி பெற நினைப்பது மக்கள் ஆட்சிக்கு ஆபத்தான ஒன்றாகும்.

ஒரு காலத்தில் வரி செலுத்துவோருக்கு மட்டுமே வாக்குரிமை என இருந்த நிலையை மாற்றி, வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை வேண்டும் என போராடி அரசியல் அமைப்பு சட்டத்தில் சேர்த்த அண்ணல் அபேத்கார் அவர்களின் முயற்சியினால், இன்று வயது வந்தோர் அனைவருமே உரிமையுடனும் பெருமையாகவும் வாக்களித்து வருகின்றோம் என்பதை யாராலும் மறுக்க முடியாது. சின்னங்களை மட்டுமே பார்த்து வாக்களித்து வந்த மக்கள், இன்று கருத்தியலையும், தேர்தல் வாக்குறுதிகளையும் தெளிவாக புரிந்துகொண்டு வாக்களிக்கின்ற நிலை உருவாகி வருவது, மக்களிடையே அறியாமை நீங்கி ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை மேம்பட்டு வருகிறது.

உங்களது வாக்கு உரி(மை) மிகவும் மகத்தானது. இரகசியமானது விற்பனைக்கானது அல்ல. வாக்களிப்பீர்...

இப்படிக்கு,



(எஸ். சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்

# வறுமை ஒழிப்பு செயல்பாடுகள்

### பண்ணை சாரா வாழ்வாதார நடவடிக்கைகள்

பண்ணை அடிப்படையிலான வாழ்வாதார நடவடிக்கைகள் குறிப்பிட்ட காலநிலையை சார்ந்துள்ளதால், காலம் தவறிய பருவமழை மற்றும் அதன் வீழ்ச்சியால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். கிராமப்புற ஏழை மக்களுக்கு நிலையான வருமானத்தை உறுதி செய்யவும் மற்றும் வருமானத்தை பெருக்கவும் பல்வேறு பண்ணை சாரா தொழில்கள் ஊக்குவிக்கப்படுகிறது.

பண்ணைசாரா முயற்சிகளில் உற்பத்தி மற்றும் சேவைப்பிரிவுகளில் குறுநிறுவன மேம்பாடு, தொகுப்பு மேம்பாடு, கைவினைஞர் மற்றும் துறை சார்ந்த தொகுப்புகள் போன்ற செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### குறு நிறுவன மேம்பாடு

குறு நிறுவனங்களின் முன்னேற்றமானது, தேவையின் அடிப்படையில் தொழில் முனைவோர்களுக்கு பயிற்சி வழங்கி, முதலீட்டிற்கான வங்கி இணைப்பு மற்றும் சந்தைப்படுத்துதல் மூலம் உறுதி செய்வதாகும். சமுதாய வல்லுநர்கள் மூலம் புதிய நிறுவனங்கள் மற்றும் பழைய தொழில் நிறுவனங்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு வணிக திட்ட அறிக்கை, சந்தை நுண்ணறிவு, சட்டபூர்வ தீர்வுகள், உரிமம் மற்றும் தரப்படுத்துதலுக்கு வழி வகை செய்யப்படுகிறது.





### தொகுப்பு மேம்பாடு

தொகுப்பினை உருவாக்குவதால் உற்பத்தி செலவுகள் குறைந்து பொருளாதார நிலை உயருகிறது. ஊரகப் பகுதிகளில் உற்பத்தி பொருட்களை ஒருங்கிணைத்தல், தரம் பிரித்தல், மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தி ஆதரவு அளிக்கிறது. பொது சேவை மையத்தினை நிறுவுவதன் மூலம், உற்பத்தி பொருட்களின் தரம் பிரிக்கவும், பேக்கேஜிங் மற்றும் “மதி” என்ற பெயரில் வணிக குறியீட்டை ஏற்படுத்தி விற்பனை செய்ய உதவுகிறது.

### கைவினைஞர் தொகுப்புகள் (கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள்)

ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள், கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்யும் குறு தொழில் நிறுவன குழுக்களை உருவாக்கி தொகுப்பு அமைக்கப்படும். இத்தொகுப்புகளை அமைப்பதன் மூலம் அவர்களுக்குள் அனுபவ பரிமாற்றத்திற்கு உதவுகிறது மற்றும் புதிய தொழில்நுட்ப முயற்சிகளை பயன்படுத்துவதன் மூலம் வடிவமைப்பு, தரம் மற்றும் சந்தை வாய்ப்புகளை மேம்படுத்துகிறது.



### துறை சார்ந்த தொகுப்புகள் (ஆடைகள், பின்னலாடை போன்றவை)

ஒரு குறிப்பிட்ட பகுதியை சேர்ந்த குறு நிறுவனங்கள் ஒரே மாதிரியான மூலப்பொருள் அல்லது முடிவுற்ற பொருட்களைக் கொண்டு ஒரே மாதிரியான உற்பத்தி பொருட்களை தயாரிக்கும் பணியில் ஈடுபடுகின்ற நிறுவனங்களை ஒருங்கிணைத்து துறைசார் தொகுப்புகளாக அமைக்கப்படுகிறது. இத்தொகுப்புகள் புதிய தயாரிப்புகளை வடிவமைக்க அவர்களது அறிவுத்தளத்தை விரிவுபடுத்துவதன் மூலம் புதிய வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ள உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தி தருகிறது.



### உணவு பதப்படுத்தும் செயல்பாடுகளில் உள்ள சுய உதவிக்குழுக்களுக்கு ஆதரவு வழங்குதல்

குறைந்த முதலீட்டில் சிறிய அளவில் ஊரகப் பகுதிகளில் சுய உதவிக் குழுக்கள் உணவு பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இவ்வகையான தொழில்லை கண்டறிந்து பிரதம மந்திரி சிறு, குறு உணவு உற்பத்தி மற்றும் பதப்படுத்தும் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு ரூ.40,000/- வரை துவக்க மூலதன நிதி வழங்கி திட்டத்தின் இதர பலன்கள் வழங்கப்படுகிறது.



### சுய உதவிக் குழு தயாரிப்புகளை சந்தைப்படுத்தல்

ஊரகப் பகுதிகளில் உள்ள மகளிர் குழுவினரால், உற்பத்தி செய்யப்படும் பல வகையான பொருட்களுக்கு உள்ளூர் சந்தையில் குறைந்த அளவிலான விற்பனை வாய்ப்புகளே உள்ளது. ஆனால் நகர்ப்புரங்களில் இதற்கான தேவை மிகுதியாக உள்ளது.



சுய உதவிக் குழுவினர் உற்பத்தி செய்யும் பொருட்களின் சந்தைப்படுத்துதலை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக, சந்தைக்குரிய நுண்ணறிவு மற்றும் ஆய்வு, பொருட்களை வகைப்படுத்துதல், உற்பத்தி பட்டியல் தயாரித்தல், பேக்கேஜிங் மற்றும் லேபிளிங் போன்றவற்றை மேம்படுத்துதல், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்திட தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னையில் மகளிர் சுய உதவிக்குழு பொருட்களின் உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்தி விற்பனை செய்ய ஏதுவாக அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் கோடைக் கொண்டாட்டம், பொங்கல் மற்றும் புத்தாண்டு கண்காட்சி, தீபாவளி மற்றும் நவராத்திரி என ஆண்டிற்கு மூன்று முறை கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருவதுடன், பல்வேறு மாநிலங்களில் நடைபெறும் சாராஸ் கண்காட்சிகளிலும் நம் சுய உதவிக் குழுவினர் கலந்து கொண்டு, தமது தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்து வருகின்றனர்.

மேலும் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் மாதந்தோறும் முதல் மற்றும் மூன்றாம் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் சுய உதவிக் குழுவினரால் இயற்கை முறையில் விளைவித்த பொருட்களின் விற்பனைக் கண்காட்சியும் நடைபெறுகிறது. இயற்கை முறையில் விளைவித்த மற்றும் சுற்றுச் சூழலுக்கு உகந்த உற்பத்திப் பொருட்களை கொண்ட பரிசு பெட்டகங்கள் விற்பனை செய்யும் முறையானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், வாடிக்கையாளர்கள் மற்றும் நிறுவனங்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கமானது பிரத்தியேகமான பரிசு பெட்டகங்களை தயாரித்து விற்பனை செய்கிறது.

## பூமாலை வணிக வளாகங்கள்

சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களுக்கு நல்ல சந்தை வாய்ப்புகளை வழங்கும் வகையில் மாவட்ட தலைமையகங்களில் உள்ள நகரத்தின் பிரதான இடங்களில் பூமாலை வணிக வளாகம் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்டம் முழுவதும் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்யும் மையமாக பூமாலை வணிக வளாகங்கள் செயல்படுகின்றன. சந்தை நுண்ணறிவைப் பெறுவதற்கு மாவட்டம், மாநிலம் மற்றும் தேசிய அளவில் கண்காட்சிகளுக்கான பொருட்களைத் தேர்ந்தெடுப்பதிலும் இம்மையங்கள் முக்கிய அங்கம் வகிக்கிறது.




## மதி அங்காடி (Mathi KIOSK)

சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களின் விற்பனையை மேம்படுத்தும் பொருட்டு மாநிலம் முழுவதும் விற்பனை அங்காடிகள் அமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக சுற்றுலா இடங்கள், பேருந்து நிலையங்கள், கோயில்கள், அரசு அலுவலகங்கள் மற்றும் இதர நிறுவனங்கள் போன்ற இடங்களில் மதி அங்காடிகள் நிறுவப்பட்டுள்ளன.



## மதி சிறுதானிய சிற்றுண்டியகம்

சிறுதானியங்களின் பயன்பாட்டை ஊக்குவிக்கவும், அவற்றை அனைத்துத் தரப்பினரிடமும் கொண்டு சென்றிடவும் சுய உதவிக் குழுக்களின் மூலம் சிறுதானிய சிற்றுண்டிகங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த சிற்றுண்டியகங்களில் சிறு தானியங்களில் செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.




## மதி அனுபவ அங்காடி

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழு மகளிர் தயாரிக்கும் தனித்துவம் மிகுந்த பொருட்கள் அனைத்தையும் ஓரிடத்தில் விற்பனை செய்திடும் வகையில் சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் மதி அனுபவ அங்காடி அமைக்கப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் தரமான பொருட்களை www.mathisandhai.com என்ற விற்பனை இணையதளம் வாயிலாகவும் பொதுமக்கள் வாங்கி மகிழ்ந்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.




## மதி எக்ஸ்பிரஸ் மின் வாகனங்கள்

ஊரகப் பகுதிகளில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் தங்களது உற்பத்திப் பொருட்கள் மற்றும் விளைபொருட்களை பல்வேறு இடங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்வதில் உள்ள சிரமங்களைப் போக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 100 மதி எக்ஸ்பிரஸ் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.



## கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு மூலம் சமூக செயல்பாடுகள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் பல்வேறு அரசுத் துறைகள், அத்துறைகளின் சேவைகள் மற்றும் பலன்களை பெறுவதற்காக உள்ளமைக்கப்பட்ட வழிமுறையைக் கொண்டுள்ளது. ஒருங்கிணைப்பு முயற்சிகள் மூலம் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDGs) அடைவதில் அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகிறது.

### சமூக உள்ளாக்கம் மற்றும் சமூக மேம்பாடு

முதியவர்கள், மாற்றுத் திறனாளிகள், குறிப்பாக நலிவடைந்த நிலையிலுள்ள பழங்குடியினர் மற்றும் பிற விளிம்புநிலை மக்களைக் கொண்டு சிறப்பு சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்படுகின்றன. முதியோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகளின் சிறப்புத் தேவைகளைக் கண்டறிய, வட்டார அளவிலான தேவைகள் கண்டறியும் முகாம்கள் நடத்தப்பட்டு, அரசுத் திட்டங்களின் பயன்கள் விளிம்பு நிலை மற்றும் நலிவடைந்த குடும்பங்களுக்கு கிடைக்க வழிவகை செய்யப்படுகிறது.



### முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் (CMBFS) :

சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் மூலம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஒருங்கிணைப்புடன், அரசு தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலை, மேல்நிலை பள்ளி, ஆதிதிராவிடர் நலத்துறை பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான காலை உணவுகள் சுய உதவிக் குழுக்கள் மூலம் தயாரிக்கப்பட்டு பள்ளிகளுக்கு அனுப்பப்படுகிறது.



### பிற துறைகளுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்

### மக்களை தேடி மருத்துவம் (MTM)

தமிழ்நாட்டில்தொற்றாநோய்களைபரிசோதிப்பதற்காக தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ் சுகாதார துறையுடன் ஒருங்கிணைந்து 388 வட்டாரங்களிலும் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் சுகாதாரத் துறையால் பயிற்சி அளிக்கப்பட்ட சுய உதவி குழுப் பெண்கள் துணை சுகாதார மையங்களுடன் (HSC) இணைக்கப்பட்டுள்ளனர். மகளிர் சுகாதார தன்னார்வலர்கள் நீரிழிவு நோயாளிகள் மற்றும் இரத்த அழுத்தம் உள்ள நோயாளிகளை பரிசோதித்து, அவர்களுக்கு சிகிச்சைக்காக ஆலோசனை வழங்குவதோடு, நாள்பட்ட நோயாளிகளுக்கு மருந்துகளையும் வழங்குகிறார்கள்.



### பாலின வன்முறைக்கு எதிரான பிரச்சாரம்

பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பிற்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு ஆண்டுதோறும் மாநிலம்முழுவதும்உள்ளஒவ்வொருஊராட்சிகளிலும் சுவரொட்டிகள்மற்றும்விழிப்புணர்வுபதாதைகள்,மனித சங்கிலி பேரணிகள், குறும்படங்கள், திரைப்படங்கள் திரையிடல், கையெழுத்து இயக்கம், மெழுகுவர்த்தி ஏந்தி ஊர்வலம் செல்லுதல், ரங்கோலிப்போட்டி மூலமும், பள்ளி, கல்லூரிகளில் பெண்கள் உரிமைகள் பற்றிய விவாதங்கள் ஆகியவை நடத்தப்படுகிறது.



## பாலின பாகுபாடு – தடுப்பு முயற்சிகள்

குழந்தை திருமணம், பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறை, பாலியல் வன்கொடுமை போன்றவற்றைத் தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் செயல்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு சுய உதவிக் குழுவிலும் ஒருவர் 'நம் தோழி' (GPP) என நியமிக்கப்பட்டுள்ளனர். பாலினம் தொடர்பான நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும், கண்காணிக்கவும் ஒவ்வொரு ஊராட்சியிலும், வட்டாரத்திலும் சமுதாய வளப் பயிற்றுநர்கள் மற்றும் வட்டார வள பயிற்றுநர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதுதவிர, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் சமூக செயல்பாட்டுக் குழுக்கள் மற்றும் 180 வட்டார அளவிலான பாலின மன்றங்கள் உருவாக்கப்பட்டு பாலினப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக வலுப்படுத்தப்பட்டு உள்ளன.

## பெண்கள் பிரச்சினைகளைத் தீர்க்க உதவும் வானவில் மையங்கள்

பெண்களுக்கு ஏற்படும் பல பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் வட்டார அளவில் வானவில் மையங்கள் செயல்பட்டு வருகின்றன. பெண்கள் மற்றும் சமூகத்தில் ஒடுக்கப்பட்ட விளிம்பு நிலையில் உள்ள பிரிவினருக்கு எதிரான வன்முறைகள் மற்றும் பாகுபாடுகளை தடுத்திடவும், உரிமைகள், மருந்துவம், உளவியல், சட்டம், தங்குமிடம், மறுவாழ்வு மற்றும் பிற ஆலோனைகளை வழங்கிடவும் இந்த வானவில் மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்டவர்களுக்கு காவல்துறை, மருத்துவம், ஆலோசகர்கள், வழக்கறிஞர்கள் ஆகியோருடன் இணைத்து அவர்களுக்கான நிவாரணம் பெற்றுத்தருதல் மற்றும் சட்டக் கல்வியறிவு, உரிமைகள் சார்ந்த முகாம்களை நடத்துவது இம்மையத்தின் நோக்கமாகும்.

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம் 2012, குழந்தை தொழிலாளர் தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல் திருத்தப்பட்ட சட்டம் 2016, குழந்தைகளுக்கான இலவச கட்டாய கல்விச்சட்டம் 2009, குழந்தை திருமண சட்டம் 2009, இந்திய தண்டனைச் சட்டம் 1860, திருத்தம் புதிய குற்றங்கள் கற்பழிப்பு (அ) கூட்டு கற்பழிப்பு), குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு சட்டம் 2015, வரதட்சணை தடுப்புச் சட்டம் 1986, பெண்களை கேலி செய்வதற்கு எதிரான சட்டம் 1997, பணியிடங்களில் பெண்களுக்கு பாலியல் வன்கொடுமை சட்டம் 2013 தொடர்பான அனைத்து சட்டங்கள் குறித்த விழிப்புணர்வுகள் இம்மையத்தின் வாயிலாக ஏற்படுத்தப்படும்.




## தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டம்

வட்டார அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல், மதிப்புக்கூட்டு வளர்ச்சியை மேம்படுத்துதல், தனி நபர் தொழில் மற்றும் தொகுப்புத் தொழிலகங்களை பண்ணை சார்ந்த மற்றும் பண்ணை சாரா பிரிவின் கீழ் அமைத்தல், தொழில் திறன் மேம்பாடு மற்றும் நிதி சேவைகளுக்கான மாற்று திட்டத்தை விரிவுபடுத்துதல் மற்றும் சமூக மேம்பாட்டிற்கான முயற்சிகளை உருவாக்குவதே ஆகும். உலக வங்கியானது இந்த திட்டத்திற்காக ஒன்றிய அரசுக்கு நிதி உதவி வழங்குகிறது. இத்திட்டத்திற்கு ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் முறையே 60:40 என்ற விகிதத்தில் நிதிப்பகிர்வு வழங்குகிறது தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டம் 2019-20 ஆம் ஆண்டிலிருந்து திருச்சி, தஞ்சாவூர், ஈரோடு, சேலம் மற்றும் கடலூர் ஆகிய 5 மாவட்டங்களில் உள்ள 20 வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகிறது.

## திறன் மற்றும் வாழ்வாதார அழைப்பு மையம்:

தீன் தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி (DDU-GKY) திட்டத்தின் கீழ் வழங்கப்படும் திறன் பயிற்சிகள், திறன் பயிற்சி வழங்கும் நிறுவனங்கள் மற்றும் வேலைவாய்ப்புகள் ஆகியன குறித்த இளைஞர்களின் ஐயங்களை தீர்ப்பதற்காக அழைப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வழைப்பு மையம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் சுய உதவிக் குழுக்களுக்காக செயல்படுத்தப்படும் வாழ்வாதார திட்டங்கள் குறித்த சந்தேகங்களையும் கையாளும் வகையில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாழ்வாதார உதவி அழைப்பு மையம் 155 330 என்ற குறு எண்ணுடன் செயல்பட்டு வருகிறது.

# தஞ்சாவூர், நாகப்பட்டிணம் மற்றும் மயிலாடுதுறை மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களின் தரமான தயாரிப்புப் பொருட்கள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், தரமான பொருட்கள் பலவற்றை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்களை அனைவரும் அறிந்து கொள்ளவும், அவற்றிற்கான சந்தை வாய்ப்புகளை அதிகரித்திடவும் மாதந்தோறும் முற்றம் இதழில் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள் குறித்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.



### சிறுதானிய மதிப்புக் கூட்டுப் பொருட்கள்

வெண்தாமரை மகளிர் சுய உதவிக் குழு,
தஞ்சாவூர் மாவட்டம்.
கைபேசி : **94877 29134**



### செயற்கை ஆபரணங்கள்

தீபம் 2 மகளிர் சுய உதவிக் குழு
மயிலாடுதுறை மாவட்டம்.
கைபேசி : **94448 85141**



### கருப்பு கவுனி, கருங்குருவி, காட்டுயானம், பூங்கார் ரக பாரம்பரிய அரிசி வகைகள்

இயற்கை விவசாயி சுய உதவிக் குழு,
நாகப்பட்டிணம் மாவட்டம்.
கைபேசி : **96775 03864**



### பாரம்பரிய தின்பண்டங்கள்

சோழா மகளிர் சுய உதவிக் குழு
மயிலாடுதுறை மாவட்டம்.
கைபேசி : **76399 13150**



### பனையோலை கைவினைப் பொருட்கள்

முல்லை மகளிர் சுய உதவிக் குழு
மயிலாடுதுறை மாவட்டம்.
கைபேசி : **94966 36679**

# பல்வேறு வேலை வாய்ப்புகளை அள்ளித் தரும் படிப்புகள்...




பள்ளிக் கல்வி பயிலும் ஒவ்வொருவருக்கும் முக்கியமான காலகட்டம் எதுவெனில் பத்தாம் வகுப்பு முடித்த பின்னர் என்ன படிக்கலாம் என்பதை தேர்வு செய்வதில்தான் உள்ளது. நாம் தேர்ந்தெடுக்கும் படிப்புதான் அடுத்த கட்டத்திற்கு நகர்த்தி செல்லும். பத்தாம் வகுப்பு தேர்வு எழுதிவிட்டு மேற்கொண்டு என்ன படிக்கலாம்? எந்தத் துறையைத் தேர்ந்தெடுக்கலாம்? என ஒவ்வொரு மாணவர்களும் தங்களுடைய எதிர்காலத்தைத் தேர்வு செய்யும் தருணம் இது.

''முதல் மதிப்பெண் பெற்றவர்கள்தான் வாழ்க்கையில் முன்னேறுவார்கள், அதிக மார்க் வாங்கியவர்கள்தான் அனைத்து வசதியான வாழ்க்கையையும் வாழ்வார்கள்'' எனும் தவறான மனப்போக்கை மாணவர்கள் மனதில் விதைக்காமல் 'உனக்குப் பிடித்த துறையைத் தேர்வு செய்' என்று பெற்றோர்கள் அறிவுறுத்தும் தருணம் இது.

பள்ளிக் கல்வியை முடித்து உயர் கல்விக்குச் செல்லும் மாணவர்கள் முதலில் உயர் கல்வியில் என்னென்ன துறைகள் இருக்கிறது என்று தெரிந்து கொள்வது நல்லது. இங்கே ஒவ்வொரு துறை ரீதியாக பலவிதமான பட்டப் படிப்புகள் உண்டு. பெற்றோர்களும் மாணவர்களும் இணைந்து, பிடித்த, ஈடுபாடுள்ள துறையிலான படிப்பைத் தேர்வு செய்வது அவசியம். 'லட்சக்கணக்கான பணத்தைச் செலவு செய்து படிக்கும் உயர்கல்விதான் சிறந்த கல்வி. அப்படி படித்தால்தான் உடனடியாக வேலை கிடைக்கும்' என்கிற தவறான புரிதல் இங்கு இன்னும் மிஞ்சியிருக்கிறது.

### மருத்துவம்:

நீட் தேர்வு கட்டாயம் எனும் விதிமுறைக்குப் பிறகு எம்.பி.பி.எஸ்., மருத்துவப் படிப்புக்கான மோகம் சற்று குறைந்து காணப்படுகிறது.

‘உனக்குப் பிடித்த துறையைத் தேர்வு செய்’

பள்ளிக் கல்வியை முடித்து உயர் கல்விக்குச் செல்லும் மாணவர்கள் முதலில் உயர் கல்வியில் என்னென்ன துறைகள் இருக்கிறது என்று தெரிந்து கொள்வது நல்லது.

இதற்கு இணையான சித்தா, ஹோமியோபதி, யுனானி, யோகா, நேச்சுரோபதி என்ற பாடப்பிரிவுகள் உள்ளன. கால்நடை மருத்துவப் படிப்பான கால்நடை மருத்துவம் (B.V.Sc.,) படிப்பும் நல்ல துறைதான் என்கிறார்கள் வல்லுநர்கள்.

மருத்துவப் படிப்புக்கு நிகராக தற்போது பிஸியோ தெரபி படிப்புகள் (B.P.T.,) படிப்புகள் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளன. இதேபோன்று பி.எஸ்.ஸி., நர்ஸிங், பி.ஃபார்ம், டி.ஃபார்ம் பார்மஸி படிப்புகளையும் பெறலாம். தற்போது மருத்துவப் படிப்பைத் தாண்டி இவை வேலைவாய்ப்பு அதிகமுள்ள துறைகளாக வளர்ந்து வருகின்றன.

## அறிவியல் சார்ந்த படிப்புகள்:

பி.எஸ்ஸி., இயற்பியல் முடித்து எம்.எஸ்ஸி., படித்தால் அரசு நிறுவனங்களில் விஞ்ஞானிகளாக பணிபுரியலாம். ஆராய்ச்சித் துறையில் அதிக வேலை வாய்ப்புகள் உண்டு. அரசுக் கல்லூரியில் இத்தகைய படிப்புக்கு கட்டணமும் குறைவு என்பது குறிப்பிடத்தக்கது. பி.எஸ்.ஸி., வேதியியல் மருந்து தயாரிப்பு குறித்த பணியிலும் வேலை வாய்ப்புகள் உண்டு. அதே நேரம் எம்.எஸ்ஸி., படித்து முடித்து CSIR தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றால் நல்ல ஊதியத்துடன் பணி நிச்சயம். பி.எஸ்ஸி., கணிதம், புள்ளியியல் போன்ற பிரிவுகளையும் படிக்கலாம்.

## கலை சார்ந்த படிப்புகள்:


பி.ஏ., பொருளாதாரம், வரலாறு போன்றவை டிகிரியாக கருதப்படும் அதே வேளையில், மேற்கொண்டு இதே துறையில் உயர்கல்வியை படித்தால் விற்பனை, பொருளாதாரம், வர்த்தகம் போன்ற துறையில் வேலை வாய்ப்பைப் பெறலாம். இவை தவிர மொழிப்பாடங்களான பி.ஏ., ஆங்கிலம் சேர்ந்து அவற்றிலேயே முதுகலையும் முடித்து எம்.ஃ.ஃ.பில் பட்டம் பெற்று ஆசிரியராகப் பணிபுரியலாம். அரசு மற்றும் தனியார் கல்வித் துறைகளில் வேலை வாய்ப்பு அதிகமுள்ள படிப்பு இது.

ஊடகத்துறையில் விருப்பம் உள்ளவர்கள் பி.ஏ. ஊடகத்துறை, பி.எஸ்ஸி., விஷுவல் கம்யூனிகேஷன், மாஸ் கம்யூனிகேஷன், எலக்ட்ரானிக்ஸ் மீடியா, ஜர்னலிசம் படிப்பில் சேர்ந்து படிக்கலாம். ஆங்கிலப் புலமையும், கற்பனைத் திறனும், அறிவுத் திறனும் இருந்தால் ஊடகத் துறையில் சிறந்து விளங்கலாம்.

பிளஸ் டூவில் வணிகம், கணக்குப் பிரிவு படித்த மாணவர்கள், வருங்காலத்தில் சி.ஏ. முடித்து ஆடிட்டராக வேண்டும் என்ற மாணவர்களின் முதல் சாய்ஸ் பி.காம்., படிப்புதான். அதைத் தொடர்ந்து CA., CMA., ICWAI., ACS., ICS., தேர்வுகளில் தேர்ச்சி பெற்றால் மருத்துவர், பொறியாளருக்கு இணையான பதவியும், ஊதியமும் கிடைக்கும். உயர்ந்த நிறுவனங்களில் கணக்காளராக பதவி புரியும் வாய்ப்பு அதிகம். முன்பெல்லாம் பட்டப் படிப்பை முடித்த பிறகுதான் இதர தேர்வுகளுக்கு முயற்சி செய்ய முடியும். ஆனால் தற்போது பட்டப் படிப்பு படிக்கும்போதே இந்தப் பயிற்சிக்கான தொடக்க நிலை தேர்வுகளையும் எழுதுவதால் காலம் வீணாவதில்லை.

பி.பி.ஏ., எனப்படும் மேலாண்மை படிப்பு பெரிய நிறுவனங்களில் விற்பனை மற்றும் விளம்பரப் பிரிவில் வேலைவாய்ப்பை உருவாக்கித் தரும். இதைத் தொடர்ந்து எம்.பி.ஏ., முடித்தால் வெளிநாடுகளிலும், பன்னாட்டு நிறுவனங்களிலும் பணி புரியலாம்.

> ‘லட்சக்கணக்கான பணத்தைச் செலவு செய்து படிக்கும் உயர்கல்விதான் சிறந்த கல்வி. அப்படி படித்தால்தான் உடனடியாக வேலை கிடைக்கும்’ என்கிற தவறான புரிதல் இங்கு இன்னும் மிஞ்சியிருக்கிறது.




உலகம் கணினி மையம் என்பதால் கணினித் துறையில் ஆர்வம் இருப்பவர்கள் பி.சி.ஏ, பி.எஸ்.ஸி., கணினி அறிவியல் கல்வியில் சேரலாம். ஐடி எனப்படும் தகவல் தொழில்நுட்பத் துறையில் அதிக வேலைவாய்ப்புகள் இந்தத்

துறைக்கு வந்து கொண்டே இருக்கின்றன. மேலும் எம்.எஸ்.ஸி முடித்தால் பொறியாளருக்கு இணையான ஊதியத்தையும் ஐடி துறையில் பெறலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஓவியத்தில் திறமை இருப்பவர்கள் அரசு ஓவிய நுண்கலைக் கல்லூரியில் BFA., படிப்பில் சேரலாம். இசைத்துறையில் ஆர்வமிக்கவர்கள் அரசு இசைக் கல்லூரிகளில் சேரலாம். திரைப்படத் துறையில் கால்பதிக்க விரும்புபவர்களுக்கு திரைப்படக் கல்லூரிகளில் பல பிரிவுகளுக்கு டிப்ளமோ படிப்பு கற்றுத் தரப்படுகிறது. அழகுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஃபேஷன் டெக்னாலஜி பட்டப் படிப்புக்கு வேலைவாய்ப்பு பெருகியுள்ளது. ஆடை வடிவமைப்பு, ஆடை உற்பத்தி, புதிய டிஸைன்கள் வடிவமைப்பு போன்ற பட்டப்படிப்புகள் இதில் சொல்லித் தரப்படுகின்றன. சென்னை தரமணியில் மத்திய அரசுக் கல்லூரியான நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆ∴ப் பேஷன் டெக்னாலஜி என்னும் புகழ் பெற்ற கல்வி நிறுவனத்தில் பயிலலாம்.

### வேளாண் துறை சார்ந்த படிப்புகள்:

தற்போது இந்தத் துறைக்கு மவுசு கூடியுள்ளது. பி.எஸ்ஸி., அக்ரிகல்சர் மற்றும் தோட்டக்கலை குறித்த படிப்புகள் உள்ளன. பி.டெக்., எனும் Food Process Engineering படிப்பும் வேலை வாய்ப்புள்ள படிப்புதான். சமையல் சார்ந்த படிப்பான கேட்டரிங், ஹோட்டல் மேனேஜ்மெண்ட், சுற்றுலாத்துறை போன்ற படிப்புகள் நேரடியாக வேலை வாய்ப்பைப் பெற்றுத்தரும் என்பதில் ஐயமில்லை. ஐடி நிறுவனங்கள் மட்டும்தான் வெளிநாடுகளில் பணிவாய்ப்பு வழங்கும் என்றில்லாமல் உணவுத்துறை சம்பந்தப்பட்ட இந்த படிப்புகள் விமானம், கப்பல் மற்றும் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் புகழ்பெற்ற சமையல் நிபுணராக உங்களை உருவாக்கும்.



இளநிலை பட்டப்படிப்புகளை வழங்கும் அரசுக் கல்லூரிகளும், தனியார் கல்லூரிகளும் நூற்றுக்கணக்கில் புகழ்பெற்று விளங்குகின்றன.



தற்போது பி.எஸ்ஸி., கம்ப்யூட்டர் சயின்ஸ், பயோ டெக்னாலஜி, மைக்ரோ பயாலஜி, பயோ கெமிஸ்ட்ரி, பிளான்ட் பயாலஜி, டயட்டீஷியன், ஹோம் சயின்ஸ், உளவியல் போன்ற பட்டப் படிப்புகளையும் இணைத்து கற்றுத் தருகின்றன.

### பொறியியல்:

அகில இந்திய அளவில் பி.இ., பி.டெக்., படிக்க விரும்பும் மாணவர்கள் ஐ.ஐ.டி., என்.ஐ.டி நிறுவனங்களில் சேர்வதையே விரும்புகிறார்கள். இதற்கென பிரத்யேக நுழைவுத் தேர்வுகள் உண்டு. ஜே.இ.இ., முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்றால் என்.ஐ.டி.,யிலும் ஜே.இ.இ. அட்வான்ஸ்டு நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்றால் ஐ.ஐ.டியிலும் சேர்ந்து படிக்கலாம்.

செலவு செய்து படிக்கும் உயர்கல்விதான் சிறந்த கல்வி. அப்படி படித்தால்தான் உடனடியாக வேலை கிடைக்கும் என்கிற என்கிற சராசரிச் சிந்தனை இன்றும் நிலவுகிறது. அது முற்றிலும் தவறு. பத்தாம் வகுப்பு முடித்தவுடன் பணி வாழ்க்கையைத் திட்டமிட்டுப் படிக்க நினைப்பவர்களுக்கு உகந்தவை பாலிடெக்னிக் எனப்படும் தொழில் சார்ந்த படிப்புகள். அதேபோல நிச்சயமாகப் பெண்கள் பாலிடெக்னிக் படித்து ஜொலிக்க முடியும். அது மட்டுமல்லாமல் இயந்திரம் (மெக்கானிக்கல்) தவிரவும் ஏகப்பட்ட படிப்புகள் இதில் உள்ளன.

பத்தாம் வகுப்பை முடித்துவிட்டு மேலும் இரண்டாண்டுகள் பள்ளிப் படிப்பைத் தொடர்ந்து அதன் பின்னர் கல்லூரியில் மூன்று முதல் ஐந்து ஆண்டுகள் படித்து வேலைக்குச் செல்வது ஒரு வகை. ஆனால் பாலிடெக்னிக் படிப்பை முடித்தவுடன் வேலைக்கு உத்தரவாதம் உண்டு. அதே வேளையில் நீங்கள் மேற்கொண்டு படிக்க ஆசைப்பட்டால் நேரடியாகப் பி.இ., இரண்டாம் ஆண்டில் சேர்ந்துகொள்ளலாம். சொல்லப் போனால், பொறியியல் படிப்பை ஆழமாகக் கற்றுக் கொள்வதற்குச் சரியான அடித்தளம் அமைத்துக் கொடுப்பவை பாலிடெக்னிக் படிப்புகள்தான். இதைப் படிப்பதன் மூலம் உங்களுக்குப் பொறியியல் குறித்த செயல்முறை கல்வியும்; அடிப்படை அறிவும் கிடைக்கும்.

பல்கலைக்கழகங்கள் பொறியியலுக்குப் பரிந்துரைக்கும் பாடத்திட்டத்தின் அடிப்படைக் கருத்துகள் பாலிடெக்னிக் படிப்புகளிலேயே சொல்லித் தரப்படுகின்றன. பிளஸ் டூ-வை சராசரியாகப் படித்து முடித்த மாணவரைக் காட்டிலும் பாலிடெக்னிக் படித்த ஒரு மாணவருக்குத் தொழில்நுட்ப அறிவு நிச்சயம் கூடுதலாக இருக்கும். அதிலும் பாலிடெக்னிக் பட்டயப் படிப்பும் (Diploma) பி.இ. பட்டமும் (Degree) உங்களிடம் இருந்து விட்டால் நல்ல சம்பளத்தோடு கூடிய வேலையும், பதவி உயர்வும் நிச்சயம்.

கொடுக்கப்பட்டிருக்கும் பட்டப் படிப்புகளோடு இன்னும் ஒவ்வொரு துறையிலும் பட்டப்படிப்புகள் தனித்தனியாக விரிந்து கொண்டே செல்கின்றன. இதைப் பற்றி முதலில் விரிவாக அலசி ஆராய்ந்து முடிவெடுப்பது பெற்றோர்கள் மற்றும் மாணவர்களின் கைகளில்தான் உள்ளது. முதலில் உங்களுக்கு ஈடுபாடுள்ள துறை எது? நீங்கள் என்னவாகப் போகிறீர்கள் என்பதை முடிவு செய்யுங்கள். உங்களுக்கான துறையைத் தேர்வு செய்வதோடு அதற்குரிய பட்டப் படிப்பை பயில அங்கீகாரம் பெற்ற கல்லூரியைத் தேர்வு செய்யுங்கள். எதிர்காலத்தில் அந்தத் துறைக்கு வேலைவாய்ப்பு சிறப்பாக இருக்கிறதா? என்பதையும் உறுதி செய்து கொள்ளுங்கள். படிக்கும்போதே பட்டப்படிப்பு சம்பந்தப்பட்ட தொடக்க நிலை உயர் தேர்வுகளையும் எழுதுவதற்குத் திட்டமிடுங்கள். பெற்றோர்களின் விருப்பத்துக்கு செவிசாய்க்காமல் உங்கள் விருப்பத்துக்கேற்ற துறையில் பிடித்த பட்டப்படிப்பை தேர்வு செய்யுங்கள். உங்கள் எதிர்காலம் சிறப்பாக அமையும்.

ஆல் தி பெஸ்ட்!



தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

# மண்பாண்டங்களால் மலர்ந்த வாழ்வாதாரம்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கல்லாவி ஊராட்சி உடையார் தெருவில் ஒரே தொழில் செய்யக் கூடிய 20 மகளிரைக் கொண்டு சாமுண்டீஸ்வரி மகளிர் குழு செயல்பட்டு வருகிறது. இக்குழுவிற்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் சேமிப்புக் கணக்குத் துவக்கப்பட்டு, குழுவின் உறுப்பினர்கள் மாதந்தோறும் சேமித்து வருகின்றனர்.குழு துவங்கிய ஆரம்பகாலக்கட்டத்தில் குழுவின் உறுப்பினர்கள் தொழில் தெரிந்தும் நிதிஉதவி இல்லாத காரணத்தினால் வறுமையில் வாடிவந்துள்ளனர்.

இந்த சமயத்தில் மகளிர் திட்டத்தின் உதவியுடன் வங்கி நிதி மற்றும் அமுதசுரபி நிதி பெற்று குழுவாக இணைந்து மண்பாண்டங்களையும், கலைப்பொருட்களையும் தயாரித்து தங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி கொண்டனர்.

இக்குழுவினர் பொருளாதார நடவடிக்கை மேற்கொள்வதற்காக வங்கிக் கடன் இணைப்பு முதல் தவணையாக ரூ.2,25,000/- இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கல்லாவி கிளையில் பெற்று தரப்பட்டது. இக்கடன் தொகையினை மூலதனமாகக் கொண்டு இக்குழு உறுப்பினர் அனைவரும் அதிக அளவில் மண்பாண்டங்களை தயாரித்து விற்பனை செய்யத் துவங்கினர். தாங்கள் பெற்ற கடன் தொகையினையும் முறையாகத் திரும்பச் செலுத்தி விட்டனர். தொடர்ந்து தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் தொழில் கடன் பெற்று தங்களின் தொழிலை மேலும் விரிவுபடுத்தி வருகின்றனர்.

மகளிர் திட்டம் மூலம் குறைந்த வட்டியில் கடன் வழங்குவதால், அதிக அளவில் இலாபமும் இக்குழுவின் உறுப்பினர்கள் பெற்று வருகின்றனர். இப்பொழுது இக்குழுவின் உறுப்பினர்கள் தாங்கள் தயாரிக்கும் மண்பாண்டங்கள் மற்றும் கைவினைப் பொருட்களை வெளி மாவட்டங்களிலும் விற்பனை செய்யும் அளவிற்கு சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர்.

தற்போது இக்குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொரும் மாதம் ரூ.15,000/- வரை வருமானம் பெறுகின்றனர். தங்களின் வாழ்வாதார வளர்ச்சிக்கு வழிகாட்டிய தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு சாமுண்டீஸ்வரி மகளிர் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.





# 24,000 ரூபாய் முதலீடு, 10 லட்சம் டர்ன் ஓவர்...

## மகளிர் குழுவினரின் அசத்தல் பிசினஸ்!

திருவண்ணாமலையிலிருந்து சுமார் 24 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது ரெட்டியார்பாளையம் கிராமம். இங்குள்ள ஒருங்கிணைந்த கூட்டுப்பண்ணைக்கான தொழிற்சாலையில் கம்பு, கேழ்வரகு, கறுப்பு உளுந்து ரகங்களைத் தரம் பிரிக்கும் பணிகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. மகளிர் குழுவால் நடத்தப்படும் இந்தத் தொழிற்சாலைக்கு 900-க்கும் மேலான விவசாயிகள் தங்கள் பொருள்களை விற்பனை செய்கிறார்கள். அந்தப் பொருள்கள் தரம் பிரிக்கப்பட்டு தமிழ்நாடு முழுவதும் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. 20 பெண்கள் சேர்ந்து நடத்தும் இந்தத் தொழிற்சாலையில் கடலை உடைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த விஜயா, நம்மை வரவேற்றுப் பேச ஆரம்பித்தார்.

“எங்க மகளிர் குழுவோட பெயர் சூரிய காந்தி. நாங்க மொத்தம் 20 பேர். நான் பத்தாவது படிச்சிருக்கேன். 2004-ம் வருஷம் குழுவை ஆரம்பிச்சோம். 2020 வரை, குழுவுல எந்தச் செயல்பாடுகளும் நடக்கல. 20 பேரும் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவங்கன்றதால எங்க நிலத்துல விளையுற பொருள்களை எங்களுக்குள்ளேயே விற்பனை பண்ணிட்டு இருந்தோம். கிட்டத்தட்ட பண்டமாற்று முறை மாதிரி. 2020-ம் வருஷம் அரசாங்க அதிகாரிகள் பிசினஸ் தொடங்குறதுக்கு எங்களை ஊக்கப்படுத்தினாங்க. ஒவ்வொருத்தரும் 1,200 ரூபாய் முதலீடு பண்ணோம். அதுலேருந்து 2,200 ரூபாயை மட்டும் எடுத்து 41 கிலோவுக்கு ஒரு கடலை மூட்டையை வாங்கினோம். தோல் உரிச்சது போக 27 கிலோ கடலை கிடைச்சுது. செக்குல கொடுத்து எண்ணெயா ஆட்டினதுல 13 லிட்டர் எண்ணெய் கிடைச்சுது. எண்ணெயையும், புண்ணாக்கையும் விற்பனை பண்ணோம். 2,500 ரூபாய் லாபம் எடுத்தோம். இப்படியே கொஞ்சம் கொஞ்சமா பணத்தைப் போட்டு எண்ணெய் ஆட்டி சில மாசங்கள் விற்பனை பண்ணிட்டு இருந்தோம்.

ஒவ்வொரு முறையும் லாபத்தைப் பார்க்கும்போது பிசினஸை விரிவுபடுத்தலாம்னு தோணுச்சு. அதனால வங்கியில 19 லட்ச ரூபாய் கடனுதவி வாங்கினோம். தவிர, தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்துலேருந்து 20 லட்ச ரூபாய் கடனுதவி கிடைச்சுது. தேவையான மெஷின்கள் வாங்கி பிசினஸை பெரிய அளவுல விரிவுபடுத்தினோம்” என்ற விஜயாவை தொடர்கிறார் குழுத் தலைவர் முத்து.

“விவசாயிகளை நேரடியா சந்திச்சோம். அவங்க உற்பத்தி பண்ற பொருள்களை அதிக விலைக்கு நாங்களே வாங்கிக்கிறதா சொன்னோம். விவசாயிகள் நடவு செய்யும்போதே அவங்களுக்கு உதவுற வகையில் நாங்க அட்வான்ஸ் கொடுக்குறதா சொன்னோம். பொருளுக்கு நல்ல விலை கிடைச்சதோட, அட்வான்ஸ் பணமும் கிடைச்சதால விவசாயிகள் எங்ககிட்ட பொருள்களைக் கொடுக்க ஆரம்பிச்சாங்க. அப்படியே நிறைய விவசாயிகள் எங்ககூட கைகோத்தாங்க. இப்போ எங்க பொருள்களையும் சேர்த்து 900 விவசாயிகளோட பொருள்களை நாங்க விற்பனை பண்றோம். உணவு தரச்சான்றிதழும் வாங்கியிருக்கோம்.



அறுவடை முடிஞ்சதும் விவசாயிகள் எங்களுக்குத் தகவல் சொல்வாங்க. நாங்க அவங்க இடத்துக்கே போய் பொருள்களை வாங்கிட்டு வருவோம். எங்க தொழிற்சாலையில வெச்சு பொருள்களைத் தரம்பிரிச்சு, சுத்தப் படுத்தி திருவண்ணாமலை வணிக வளாகத்துல உள்ள பேக்கிங் யூனிட்டுக்கு அனுப்புவோம். பிசினஸை பொறுத்தவரை மூலப்பொருள்கள் தரமா இருக்குறதை உறுதி செய்யுறது எவ்வளவு முக்கியமோ, அதே அளவுக்கு மார்க்கெட்டிங்கும் முக்கியம்” என்ற முத்து, தொழிலை விரிவுபடுத்திய விதம் பற்றி பேச ஆரம்பித்தார்...

“ஆரம்ப காலத்துல கடை கடையா ஏறி இறங்கிருக்கோம். லாபம் குறைச்சலா வெச்சு பொருள்களை விற்பனை பண்ணிருக்கோம். அரசாங்கத்துலேருந்து நிறைய இடங்கள்ல ஸ்டால் போடுற வாய்ப்பு எங்களுக்கு கிடைச்சுது. ஸ்டால்களுக்கு வர்றவங்க எங்களுக்கு ரெகுலர் கஸ்டமர்கள் ஆகிட்டாங்க. மொத்த வியாபாரிகளும் எங்ககிட்ட இருந்து பொருள்களை வாங்க ஆரம்பிச்சாங்க. பிசினஸ் பிக் அப் ஆயிருச்சு. இப்போ மாசம் 250 கிலோ கம்பு, 300 கிலோ கேழ்வரகு, 350 கிலோ பச்சைப்பயறு, 350 கிலோ காராமணி, 200 கிலோ கொள்ளு விற்பனை பண்றோம். 120 லிட்டர் தேங்காய் எண்ணெய் , 2,500 லிட்டர் கடலை எண்ணெய், 500 லிட்டர் நல்லெண்ணெய் தயாரிச்சு விற்பனை பண்றோம். மாசம் 10 லட்ச ரூபாய் வரை டர்ன் ஓவர் பண்றோம். வர்ற லாபத்தை சமமா பிரிச்சுக்கிறோம். இப்போ எங்களுக்குனு ஓர் அடையாளத்தை உருவாக்கியிருக்கோம். விவசாயிகளுக்கு உதவுற கூடுதல் திருப்தியும் கிடைச்சிருக்கு” - அகமும் முகமும் நிறைய விடை கொடுக்கிறார்கள் சூரியகாந்தி மகளிர் குழுவினர்.

நன்றி! அவள் விகடன்
23:04:2024

# வழிகாட்டிய வாழ்வாதார இயக்கம்

திண்டுக்கல் மாவட்டம், குஜிலியாம்பாறை வட்டாரத்தில் உள்ள ஆர்.வெள்ளோடு ஊராட்சியில் வசித்து வரும் என் பெயர் செந்தாமரை. நானும் எனது கணவரும் கூலி வேலை செய்து பிழைப்பு நடத்தி வந்தோம். எங்களுக்கு இரு குழந்தைகள் உள்ளனர். நாங்கள் செய்யும் கூலி வேலையில் போதிய வருமானம் இன்றி சிரப்பட்டு வந்த நிலையில், சந்தையில் காய்கறி விற்பனைச் செய்யலாம் என்று நினைத்தோம். ஆனால் எங்களிடம் போதிய முதலீடு இல்லாத காரணத்தால் செய்வதறியாது தடுமாறி வந்தேன். இந்நிலையில் எங்கள் ஊராட்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்பாட்டிற்கு வந்தது.

இயக்கத்தின் வழிகாட்டுதலில் எங்கள் ஊராட்சியை சேர்ந்த 12 பெண்கள் இணைந்து ஸ்ரீ முத்தாலம்மன் என்ற பெயரில் குழு ஆரம்பித்து, வங்கியில் சேமிப்புக் கணக்கு தொடங்கினோம். எங்கள் குழுவிற்கு சமுதாய முதலீட்டு நிதியாக ரூ.50,000/- வழங்கப்பட்டது. அதில் எனக்கு ரூ.10,000/- வழங்கப்பட்டது. அதைக் கொண்டு ஆரம்பத்தில் நான் சிறிய அளவில் காய்கறி வியாபாரம் செய்து வந்தேன். அதன் மூலம் கிடைத்த வருவாயினைக் கொண்டு வங்கிக் கடனை தவணை தவறாமல் கட்டி முடித்தபின், கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் மூலம் கடனாக ரூ. 2,50,000/- பெற்று எனது காய்கறி கடையை விரிவுப்படுத்தி விற்பனை செய்து வருகிறேன். தற்போது என்னுடைய வாழ்வாதாரம் முன்னேற்றம் அடைந்துள்ளது.

எனது முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்து எனக்கு வழிகாட்டிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும், கிராம வறுமை ஒழிப்பு சங்கத்திற்கும் எனது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

செந்தாமரை,
ஸ்ரீ முத்தாலம்மன் மகளிர் சுய உதவிக் குழு



# வாழ்வில் ஒளி ஏற்றி வைத்த மகளிர் திட்டம்

மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை வட்டாரம், மாப்படுகை ஊராட்சியில் உள்ள இராமபுரம் குக்கிராமத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் தீபம் 2 மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் தங்களின் வாழ்வாதாரத் தேவைக்காக ரூ.1,50,000/- மற்றும் வங்கி மூலம் ரூ. 5,00,000/- என மொத்தம் ரூ. 6,50,000/- கடன் பெற்று குழுவாக இணைந்து செயற்கை ஆபரண நகைகளைத் தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர்.

செயற்கை ஆபரணத் தயாரிப்பில் பத்தாண்டுகளுக்கும் மேல் அனுபவம் பெற்றுள்ள தீபம் 2 மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தாங்கள் தயாரிக்கும் செயற்கை ஆபரணங்களை மகளிர் திட்டம் மூலம் நடைபெறும் கண்காட்சிகள், கல்லூரி சந்தைகள், பிற மாநிலங்களில் நடைபெறும் சாராஸ் கண்காட்சிகளில் விற்பனை செய்து, கணிசமான வருவாய் பெற்று வருகின்றனர். தங்களுக்குக் கிடைக்கும் இலாப தொகையினைக் கொண்டு வங்கிக் கடனையும் முறையாகத் திருப்பம் செய்துள்ளனர். “குக்கிராமத்தைக்கூட தாண்டாத நாங்கள் மகளிர் திட்டம் மூலம் பிற மாநிலங்களிலும் எங்களின் தயாரிப்புகளை விற்பனை செய்த வருவாய் பெற்று வருகிறோம். டில்லி வரை சென்றுள்ளோம். இது மகளிர் திட்டத்தின் மூலமே சாத்தியமாயிற்று. எனவே, எங்களின் வாழ்வில் ஒளி ஏற்றி வைத்த மகளிர் திட்டத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்” என்று தீபம் 2 மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர்.





## மகளிர் வாழ்வாதாரம் தொடர்பான

# வாய்ப்புகள், நலத்திட்டங்கள், நிதி உதவிகள்

மற்றும் ஊரக நகர்ப்புர இளைஞர்களுக்கான திறன் பயிற்சிகள் குறித்த வழிகாட்டுதல்கள் பெறவும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் மற்றும் புகார்கள் தெரிவிக்கவும் கீழ்கண்ட தொலைபேசி எண்ணை அழைக்கவும்.

வாழ்வாதார உதவி அழைப்பு எண்

# 155 330

LIVELIHOOD HELPLINE NUMBER

அனைத்து வேலை நாட்களிலும், காலை 09.30 மணி முதல் மாலை 06.30 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.



**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்**

அன்னை தெரசா மகளிர் வளாகம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034 | 044-28173415, ddugkytn2016@gmail.com

## அன்னையர் தினம் (மே 12)
### தாய்மையைப் போற்றுவோம்




தாய்மையைப் போற்றக்கூடிய வகையில் ஆண்டுதோறும் மே மாதம் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை உலகம் முழுவதும் அன்னையர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. அமெரிக்காவைச் சேர்ந்த ஜார்விஸ் என்ற அம்மையார், போரில் பலியான அமெரிக்க வீரர்களின் குடும்பங்களின் நல்வாழ்விற்காகவும், சமாதானத்திற்காகவும் பாடுபட்டு, இறுதி காலம் வரை சமூக சேவகியாக வாழ்ந்து மறைந்தார். அவருடைய மகளான அன்னா ஜார்விஸ் முதன் முதலாக தனது அன்னையின் நினைவாக 1908ஆம் ஆண்டின் கிறிஸ்துவ தேவாலயத்தில் மே மாதத்தின் ஞாயிற்றுக்கிழமை ஒன்றில் சிறப்பு வழிபாடு நடத்தினார்.

சமூக நலனில் அக்கறை கொண்ட அன்னா ஜார்விஸின் கோரிக்கையை ஏற்று பென்சில்வேனியா மாகாண அரசு 1913ஆம் ஆண்டு முதல் அன்னையர் தினத்தை அங்கீகரித்தது. மேலும் இவரின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட அமெரிக்க ஜனாதிபதி உட்ரோ வில்சன், ஆண்டுதோறும் மே மாதம் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமையை அதிகாரப்பூர்வமாக அன்னையர் தினமாகவும், அன்று விடுமுறை தினமாகவும் 1914ஆம் ஆண்டு அறிவித்தார்.

## உலக செவிலியர் தினம் (மே 12)
### உன்னத தொண்டினை உலகிற்கு உணர்த்துவோம்

மருத்துவ உலகிற்கு செவிலியர்கள் (நர்ஸ்) ஆற்றி வரும் உன்னத தொண்டினை உலகிற்கு உணர்த்தும் வகையில் உலகச் செவிலியர் தினம் ஆண்டுதோறும் மே 12ஆம் தேதி கடைபிடிக்கப்படுகிறது. 1965ஆம் ஆண்டு முதல் உலக செவிலியர் அமைப்பு இந்தத் தினத்தை அனுசரித்து வருகிறது. சாதாரண வைத்திய சேவைகளிலிருந்து போர் கால சேவைகள் வரை ஒவ்வொரு கட்டத்திலும் செவிலியர்களின் சேவைகள் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம், நவீன செவிலியர் முறையை உருவாக்கிய இங்கிலாந்தைச் சேர்ந்த புளோரன்ஸ் நைட்டிங்கோல் அம்மையாரின் பிறந்த நாளான மே 12ஆம் தேதியை சிறப்பாக நினைவு கூர முடிவு செய்யப்பட்டு, அன்றைய தினத்தை உலக செவிலியர் தினமாக அனுசரித்து, இங்கிலாந்தில் ஆண்டுதோறும் மே 12ஆம் தேதி இலண்டனில் உள்ள வெஸ்ட் மினிஸ்டர் அபே என்ற இடத்தில் சம்பிரதாயபூர்வமாக இந்த தினம் கொண்டாடப்படுகிறது





## உலக புகையிலை எதிர்ப்பு தினம் (மே 31)
### உடல் நலம் காத்திடுவோம்

புகைப்பிடிப்பதால் ஏற்படும் பாதிப்புகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக உலக சுகாதார நிறுவனத்தால் 1987ஆம் ஆண்டு முதல் மே 31ஆம் தேதி சர்வதேச புகையிலை எதிர்ப்பு தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. புகையிலையால் ஏற்படும் ஆபத்தையும், அவற்றிலிருந்த விடுபடும் வழிகளையும் எடுத்துரைப்பதே இத்தினத்தின் நோக்கமாகும்.

மனித உயிர்களுக்கு இறப்பை அளிக்கும் முக்கிய காரணியாக புகையிலை கருதப்படுகிறது. புகையிலை என்றதும் நினைவிற்கு வருவது சிகரெட். இதில் உள்ள நிக்கோடின் என்ற நச்சுப் பொருள்தான் புகைப்பவர்களை அடிமையாக்குகிறது. புற்றுநோய் வரும் காரணங்களில் புகையிலைக்கு 70 சதவீதம் பங்குள்ளது. இத்தகைய ஆபத்தைத் தரும் புகையிலையினைப் பயன்படுத்துவதைத் தவிர்த்திட உலக புகையிலை ஒழிப்பு தினத்தில் உறுதியேற்போம்.

TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION
Empowering Lives

## தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்

# சுய உதவிக் குழுவால் கிடைத்த வாழ்வு...

திருவாரூர் நகராட்சிக்கு உட்பட்ட கீழவீதி பகுதியில் வசிக்கும் எனது பெயர் ஆர்.கீதா. ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த நான், சிறுவயதிலேயே தந்தையை இழந்ததால், என் தாயாரின் வருமானத்தில் வளர்ந்தேன். மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு என்னை திருமணம் செய்து வைத்தனர். எங்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். எனது கணவர் மிகவும் குறைவான கூலியில் வேலைக்குச் சென்று வந்தார். எனத கணவரின் குறைவான வருவாயினைக் கொண்டு மிகவும் சிரமத்துடன் எனது குடும்பத்தை நடத்தி வந்தேன்.

இந்நிலையில், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் எங்கள் பகுதில் உள்ள சமுதாய அமைப்பாளர் அவர்களின் உதவியுடன் நான் வசிக்கும் 11-வது வார்டில் உள்ள பெண்கள் இணைந்து “சுவேத கணபதி” மகளிர் சுய உதவிக்குழுவினை துவக்கினர். அக்குழுவில் இணைந்த நான், ரூ.200/- குடும்பச் செலவுக்கும், குழந்தைகளின் படிப்புச் செலவுக்கும் சேமிப்பாக இருக்கும் என்று நினைத்து குழுவில் சேமிக்கத் தொடங்கினேன். குறைந்த வட்டியில் சேமிப்புக் கடனாக ரூ.10,000/- எனக்கு கிடைத்தது. அதை வைத்து மசாலா பொருட்களை வாங்கி சிறிய பாக்கெட்டுகளில் போட்டு விற்பனை செய்ய ஆரம்பித்தேன். அதன் மூலம் சிறிய அளவில் வருவாய் கிடைத்தது. சில மாதங்களில் எனக்கு ரூ.16,600/- வங்கிக் கடன் கிடைத்தது. இதன் மூலம் எனது தொழிலை கொஞ்சம் கொஞ்சமாக விரிவுபடுத்தினேன். என் கணவரும் எனக்கு ஆதரவாக இருந்து என்னை ஊக்கப்படுத்தினார்.

நான் செய்யும் தொழில் எனக்கு மிகுந்த நம்பிக்கையை அளித்தது. சிறிது சிறிதாக எனது தொழிலை விரிவுபடுத்திய நான் இன்று திருவாரூர் மாவட்டம் மட்டுமின்றி நாகப்பட்டினம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் எனது தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்யும் அளவிற்கு எனது தொழிலை விரிவுபடுத்தியுள்ளேன். இப்போது ஜெயம் ஏஜென்சிஸ் என்ற பெயரில் கடை நடத்தும் அளவுக்கு முன்னேறியுள்ள நான், தற்போது ரூ.83,000/- கடன் தொகை பெற்று திருப்பி செலுத்தி வருகிறேன்.

வறுமையில் வாழ்ந்து வந்த நான் தற்போது தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் முன்னேறி வருகிறேன். எனது குழுவின் உறுப்பினர்களும் எனக்கு மிகவும் உறுதுணையாக இருக்கிறார்கள்.

எனது வாழ்க்கையின் பொருளாதார நிலையை உயர்த்தியதற்காக தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் மற்றும் எங்கள் சுவேத கணபதி மகளிர் சுய உதவிக்குழுவிற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆர். கீதா





# ஏழ்மையைப் போக்கும் வாழ்வாதார இயக்கம்

என் பெயர் சுபிதா. கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சி, 16-வது வார்டு, கிறிஸ்து நகர் பகுதியில் வசித்து வரும் கைம்பெண்ணான எனக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். எனது குடும்பம் பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்ததால் என் குடும்ப வறுமையைக் கருத்தில் கொண்டு ஏதாவது சுய தொழில் செய்து வருமானம் ஈட்டி முன்னுக்கு வர வேண்டும் என தீர்மானித்தேன். ஆனால் ஏதாவது தொழில் செய்ய வேண்டும் என்றால், அதற்கு முதலீடு தேவைப்பட்டது. வெளிநபர்களிடம் கடன் வாங்கலாம் என்றால் வட்டி அதிகமாக இருந்தது. அதனால் என்ன செய்வது என்று குழப்பத்தில் இருந்தேன். அப்போதுதான் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் மற்றும் மகளிர் சுய உதவிக் குழு ஆகியவற்றின் பயன்கள் பற்றி தெரிந்து கொண்டேன். உடனடியாக எங்கள் பகுதியில் உள்ள சமுதாய அமைப்பாளர் வழிகாட்டுதலின்படி எங்கள் பகுதியில் செயல்படும் நெல்லி மலர் மகளிர் சுய உதவிக் குழு 5-ல் உறுப்பினராக சேர்ந்தேன்.

குழுவில் சேர்ந்து மாதந்தோறும் சிறிய அளவில் சேமித்து வந்த எனக்கு, குழுவின் சேமிப்பு தொகையிலிருந்து உள் கடன் மற்றும் வங்கி நேரடிக் கடன் கிடைக்கப் பெற்றது. இத்தொகையினை மூலதனமாகக் கொண்டு ஊறுகாய் தயாரித்து, 'வின்' என்ற பெயரில் விற்பனை செய்ய ஆரம்பித்தேன். சிறிய அளவில் நான் ஆரம்பித்த ஊறுகாய் தயாரிக்கும் தொழிலானது சிறிது சிறிதாக வளர்ந்து இன்று சிறந்த முறையில் செயல்பட்டு வருவதால் எனக்கு அதிக வருவாய் கிடைக்கிறது.எனது குடும்பத்தின் வறுமையும் நீங்கி வருகிறது.

தற்போது எனது நிறுவனத்தில் மூன்று நபர்களையும் வேலைக்கு அமர்த்தி, அதிக அளவில் ஊறுகாய் தயாரித்து விற்பனை செய்து வருகிறேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகர்ப்புர வாழ்வாதார இயக்கமானது என்னைப் போன்ற ஏழைகளின் வாழ்வில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது என்பதை அனுபவரீதியாக அறிந்துகொண்ட நான், அந்த இயக்கத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுபிதா, நெல்லி மலர் மகளிர் சுய உதவிக் குழு 5,
கிறிஸ்து நகர், நாகர்கோவில் மாநகராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்,



# அகர்பத்தி தயாரிப்பும்... நீங்கிய வறுமையும்...

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் நகராட்சி, விஜயேந்திர ஸ்வாமி மடம் தெருவில் செயல்படும் மித்ரா மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் அகர்பத்தி தயாரிக்கும் தொழிலை செய்யத் தீர்மானித்தனர். இக்குழுவிற்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் வங்கிக் கடனாக ரூ.4,80,000/- வழங்கப்பட்டது.

குழுவின் செயல்பாடுகள் குறித்து இக்குழுவின் உறுப்பினர்கள் கூறும்போது,"குழுவில் இணைவதற்கு முன்னர் நாங்கள் தனித்தனியாக சிறிய அளவில் அகர்பத்திகள் தயாரித்து விற்பனை செய்து, குறைவான வருமானம் பெற்று வந்தோம். தற்போது ஒன்றாக இணைந்து, வங்கிக் கடன் இணைப்புப் பெற்று அதிக அளவில் அகர்பத்திகளைத் தயாரித்து விற்பனை செய்வதன் மூலம் எங்களுக்கு அதிக அளவில் வருவாய் கிடைக்கிறது.வங்கிக் கடனையும் முறையாகத் திருப்பிச் செலுத்தி வருவதுடன், தேவைக்கு அதிகமாக உள்ள பணத்தை சேமித்தும் வருகிறோம். எங்களின் பொருளாதார நிலையும் உயர்ந்து வருகிறது. எங்களின் வளர்ச்சிக்கு உதவிய தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு எங்களின் மித்ரா மகளிர் சுய உதவிக் குழுவின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்று மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர்.



# சிறுதொழில்களால் சிறந்த வாழ்க்கை

சேலம் மாநகராட்சி, குகை பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் வெண்பா மகளிர் சுய உதவிக்குழுவானது சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் வங்கிக்கணக்கு துவங்கி, அதன்மூலம் சேமிப்பு மற்றும் காப்பீடு போன்ற பயன்களைப் பெற்று வருகின்றனர்.குழு வங்கிக் கணக்கின் மூலம் வங்கிக் கடனைப் பெற்று, அதனை மூலதனமாகக் கொண்டு, குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் சிறுதொழில்களை தொடங்கி, தாங்கள் மட்டுமல்லாமல் மற்ற நபர்களுக்கும் வேலைவாய்ப்பை வழங்கி வருகின்றனர். அதில் சில உறுப்பினர்களின் வெற்றிகரமான செயல்பாடுகளைக் காண்போம்.

சாந்தி என்ற உறுப்பினர் சுண்ணாம்பு வியாபாரம் செய்து மாதந்தோறும் ரூ. 8,000/- வருமானம் பெற்று வருகிறார். அங்கேஸ்வரி என்பவர் சிறிய அளவில் பீடா கடை வைத்து தனது குடும்பத்தின் நிதி நிலைமையை சீரமைத்துள்ளார்.

மலர்விழி மற்றும் லதா என்ற இரண்டு உறுப்பினர்கள் தையல் இயந்திரங்கள் வாங்கி தையல் தொழிலை செய்து வருவதுடன், மற்றவர்களுக்கும் வேலைவாய்ப்பை வழங்கியுள்ளனர். கூலிக்கு வெள்ளி வாங்கி ஆபரணங்கள் செய்து கொடுத்து வந்த பிரியா என்பவர் குழுவில் கடன் பெற்று தற்போது சொந்தமாக வெள்ளி கொலுசுகளை தயாரித்து வருகிறார்.

குழுவின் வைப்பு நிதி மற்றும் சிறுகடன் மூலம் வெண்பா மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் வாழ்வாதாரம் மேம்பாடு அடைந்துள்ளது. பொருளாதார நடவடிக்கையில் மட்டும் ஈடுபடாமல், சுகாதாரம் சார்ந்த விழிப்புணர்வு ஏற்படுத்துதுல், சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல், பெண் கல்வி, குழந்தை திருமணம், பெண்கள் பாதுகாப்பு போன்றவற்றிலும் வெண்பா மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் ஈடுபட்டு வருகின்றனர்

குழுவில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் அரசு காப்பீடு (முதலமைச்சர் காப்பீடு) மற்றும் மத்திய அரசின் பிரதம மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா, PMSBY, PMJJBY போன்ற காப்பீட்டுத் திட்டங்களில் இணைந்துள்ளனர்.தங்கள் மட்டுமின்றி தங்கள் குழுவின் சார்பாக குடும்ப உறுப்பினர்களுக்கும் காப்பீட்டை பெற்றுத் தந்துள்ளனர்.

நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலால் பொருளாதார வளர்ச்சி பெற்றுள்ள வெண்பா மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் தங்களின் வாழ்வாதார வளர்ச்சிக்கு வழிகாட்டிய தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.





# வாழ்வாதார இயக்கத்தால்
# வளம் பெற்ற மகளிர்

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செங்கல்பட்டுமாவட்டம், தாம்பரம்நகராட்சி பகுதி, வார்டு 13ல் அத்திப்பூக்கள் மகளிர் சுய உதவிக்குழு செயல்பட்டு வருகிறது. இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ள 12பெண்களும் தவறாமல் தங்களின் சேமிப்புத் தொகையை செலுத்தி விடுகின்றனர்.

இக்குழுவின் ஊக்குனர், பிரதிநிதி (ம) உறுப்பினர்களுக்கு மகளிர் குழுவின் அவசியம், குழுவின் செயல்பாடுகள், குழுவினை வழிநடத்துதல், வங்கி செயல்பாடுகள் (ம) பேரேடுகள் பராமரித்தல், சேமிப்பு செலுத்துதல், உள்கடன்வழங்குதல் ஆகியவை குறித்து பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

இக்குழுவிற்கு முதல் முறையாக ரூ. 50,000/- வங்கிக் கடன் வழங்கப்பட்டது. அந்தக் கடனை முறையாகவும், காலம் தவறாமலும் திரும்பச் செலுத்தியதால் தற்போது ரூ.10,00,000/- வங்கிக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தொகையை குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் உள்கடனாகப் பெற்று பல்வேறு தொழில்களை செய்து, வருவாய் பெற்று வருவதுடன், கடனையும் திரும்பச் செலுத்தி வருகின்றனர். இதன் காரணமாக இக்குழுவிற்கு வட்டி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் உறுப்பினரான ஜேனட் அமலோற்பவ மேரி என்பவர் கூறும்போது, ‘அத்திப் பூக்கள் மகளிர் சுய உதவிக் குழுவில் 10 வருடமாக நான் உறுப்பினராக இருக்கிறேன்.வறுமைக் கோட்டின் கீழ் இருக்கும் குடும்பத்தைச் சேர்ந்த எனக்கு 2 குழந்தைகள் உள்ளனர். நான் பினாயில், ஆலா மற்றும் பிளீச்சிங் பவுடர் போன்றவற்றை சிறிய அளவில் தயாரித்து விற்பனை செய்து வருகின்றேன். நான் செய்யும் தொழிலை விரிவுபடுத்த நினைத்தேன். ஆனால் அதற்கான மூலதனம் இல்லாமல் சிரமப்பட்டு வந்தேன். இந்த நிலையில் நான் குழுவில் உள்கடனாக ரூ. 1,00,000/- பெற்று, அதைக் கொண்டு நான் செய்து வரும் தொழிலுக்குத் தேவையான மூலப்பொருட்களை வாங்கி தற்போது பெரிய அளவில் பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்து கணிசமான அளவில் வருவாய் பெற்று வருகின்றேன்” என்று மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

இவரைப் போலவே இக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் பல்வேறு தொழில்களை செய்து பொருளாதார வளர்ச்சி பெற்று வருகின்றனர்.

ஏழை மக்களின் வாழ்வில் பொருளாதார வளத்தை ஏற்படுத்தும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு அத்திப்பூக்கள் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.








## உடல் நலம் காப்போம்...

# அதிகளவில் பெண்களை தாக்கும் ஆஸ்துமா... ஆரம்பகால அறிகுறிகளும்.. தடுக்கும் வழிகளும்..

ஆஸ்துமாவை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறியும் பட்சத்தில் நம்மால் அதன் விளைவுகளை ஓரளவுக்கு கட்டுப்படுத்த முடியும். மூச்சுத் திணறல், நெஞ்சு வலி ஆகியவை ஆஸ்துமா நோயின் ஆரம்ப கட்ட அறிகுறிகள் ஆகும். சுவாசிப்பதை கடினமாக்கும் இந்த நோயானது சுவாச பாதையில் ஏற்படும் அழற்சி தன்மையினால் ஏற்படுகின்றது. பல்வேறு காரணங்களினால் ஆஸ்துமா நோயானது ஏற்படலாம்.

பலருக்கும் ஆஸ்துமா நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருந்தாலும் பெண்களை அதிக அளவில் ஆஸ்துமா தாக்குவதாக வல்லுநர்கள் கூறுகின்றனர். முக்கியமாக நகரங்களில் ஏற்பட்டுள்ள காற்று மாசு காரணமாக குழந்தைகள் பெண்கள் என பலருக்கும் ஆஸ்துமா நோய்க்கான அறிகுறிகள் ஏற்பட்டுள்ளன.

சமீபத்தில் கிடைத்துள்ள அறிக்கையின்படி ஆஸ்துமா நோயானது ஆண்களை ஒரு விதமாகவும், பெண்களை வேறு விதமாகவும் தாக்குவதாக அதில் தெரிய வந்துள்ளது. பருவ வயதை எட்டிய பிறகு பெண்களில் பெரும்பாலானோர் ஆஸ்துமா நோய் தாக்கும் அபாயத்தில் இருக்கின்றனர்.

முக்கியமாக உடலில் ஏற்படும் ஹார்மோன் மாற்றம்தான் பெண்களை ஆஸ்துமா நோய் எளிதில் தாக்குவதற்கான காரணம் என அதில் கூறப்பட்டுள்ளது. சமையல் செய்வது, வீட்டை சுத்தம் செய்வது போன்றவற்றினால் ஏற்படும் புகை, தூசி உணவு பொருட்களில் இருந்து வெளிவரும் வாசனை ஆகியவை அவர்களின் சுவாசப் பாதையில் கோளாறுகளை ஏற்படுத்துவதாக வல்லுநர்கள் கூறுகின்றனர்.

இதை தவிர ஆஸ்துமாவை தூண்டக்கூடிய சூழ்நிலைகளில் இருப்பதாலும் இவை நிலைமையை மோசமாக்க கூடும். முக்கியமாக கிராமங்களில் பெரும்பாலான பெண்கள் குழந்தைகளை பார்த்துக் கொள்வது, வீட்டை பராமரிப்பது போன்றவற்றை தங்களது முக்கிய வேலையாக செய்து வருகின்றனர். இது போன்ற பல்வேறு விதமான காரணிகள் பெண்கள் அதிக அளவில் ஆஸ்துமாவினால் பாதிக்கப்படுவதை ஊக்குவிக்கிறது.


ஆஸ்துமா நோய் தாக்கியதில் 20 - 25 பெண்கள் நெஞ்சில் அழுத்தம், மூச்சு திணறல் ஆகியவற்றை அனுபவித்துள்ளதாக தெரிவித்துள்ளனர். மேலும் கர்ப்பமாக உள்ள பெண்களுக்கு ஆஸ்துமா ஏற்படும் பட்சத்தில், அவை மிகுந்த ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### ஆஸ்துமா உள்ளதற்கான அறிகுறிகள்!

ஆஸ்துமாவை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறியும் பட்சத்தில் நம்மால் அதன் விளைவுகளை ஓரளவுக்கு கட்டுப்படுத்த முடியும். ஒருவர் ஆஸ்துமா தொற்று இருப்பது கண்டறியப்பட்டதும், அவருக்கு என்ன விதமான காரணிகள் ஆஸ்துமாவை ஏற்பட காரணமாக உள்ளன என்பதையும் கண்டறிவது அவசியமாகும். ஆஸ்துமாவினால் பாதிக்கப்பட்டுள்ள பெண்களுக்கு மூக்கு ஒழுகுதல், தும்மல், தலைவலி, மூச்சுத்திணறல், படிக்கட்டுகள் ஏறும் போது மூச்சுத்திணறல், இருமும் போது சளி வெளிவருதல், பருவநிலை மாற்றங்களை எதிர்கொள்ள முடியாமை போன்ற அறிகுறிகள் பொதுவாக ஏற்படுகின்றன

### ஆஸ்துமாவில் இருந்து தற்காத்துக் கொள்வது எப்படி ?

ஆஸ்துமா ஏற்படுவதை முழுவதுமாக நம்மால் தடுக்க முடியாவிட்டாலும் சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம் முடிந்த அளவு ஆஸ்துமா ஏற்படும் வாய்ப்பை நம்மால் குறைக்க முடியும். அதுக்கு நம்முடைய வாழ்க்கை முறையில் ஆரோக்கியமான உணவு பழக்கத்தை கடைப்பிடித்தல், ஆஸ்துமாவை உண்டாக்கும் காரணிகளை கண்டறிந்து அவற்றில் இருந்துதள்ளிஇருத்தல்,தூசுபுகைபோன்றவற்றிலிருந்து ஒவ்வாமையை ஏற்படுத்தும் சூழ்நிலைகளில் இருந்தும் தள்ளிஇருத்தல், சுவாசிப்பதில் அதிகம் கவனம் செலுத்துதல் மற்றும் முறையான சரியான சிகிச்சை முறைகளை மேற்கொள்ளல் போன்ற சில மாற்றங்களை செய்தாலே போதுமானது.



சட்டம் என்ன சொல்கிறது?

# இந்து குழந்தைகள் மற்றும் பாதுகாவலர் சட்டம், 1956



இந்து சிறார்கள் மற்றும் பாதுகாவலர் சட்டம், 1956, இந்து சமயச் சட்டங்களின் ஒரு பகுதியாக இந்திய நாடாளுமன்றத்தில் 1956ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. பிற இந்து சமயச் சட்டங்கள் இந்திய இந்து திருமணங்கள் சட்டம் 1955, இந்து வாரிசுரிமைச் சட்டம், 1956 மற்றும் இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டம், 1956 ஆகும். இச்சட்டம் சிறார்களுக்கு 18 வயது நிரம்பும் வரை சிறார்களையும், அவர்தம் சொத்துக்களையும் மற்றும் உரிமைகளையும் பராமரிக்கும் பாதுகாவலர் குறித்து விளக்குகிறது.

இந்தச் சட்டம் 1956 ஆம் ஆண்டில் ஜவகர்லால் நேரு தலைமையிலான இந்திய அரசால் இந்து குழந்தைகள் மற்றும் பாதுகாவலர் சட்டம், இந்திய இந்துக்களின் தனிப்பட்ட சட்டத்தின்படி சிறார்களைப் பற்றிய கொள்கைகளை வரையறுக்கிறது.

### முக்கியமான வரையறைகள்

சிறார் குழந்தைகள் என்பவர்கள் 18 வயதுக்கு உட்பட்டவர். ஒரு பாதுகாவலர் என்பவர் 18 வயதிற்குட்பட்ட குழந்தையின் சொத்தையும், குழந்தையையும் பராமரிப்பவர் ஆவர்.

### பாதுகாவலர்களின் வகைகள் பின்வருமாறு:

ஒரு இயற்கை பாதுகாவலர், தாய் அல்லது தந்தையால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாதுகாவலர் மற்றும் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட பாதுகாவலர்.

இந்த சட்டம் அனைத்து இந்துக்கள், சீக்கியர்கள், சமணர்கள் மற்றும் பௌத்தர்களுக்கும் பொருந்தும். மேலும் இச்சட்டத்தில் லிங்காயதம், பிரம்ம சமாஜம் மற்றும் ஆரிய சமாஜத்தைப் பின்பற்றுபவர்களும் அடங்குவர். இறுதியாக இஸ்லாம், கிறிஸ்தவம், பார்சி அல்லது யூதர்கள் அல்லாதவர்கள் இந்தச் சட்டத்தின் மூலம் ஆளப்படுவார்கள்.

குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் ஒரு பெற்றோரையாவது கொண்ட சட்டப்பூர்வ மற்றும் முறைகேடான சிறார்களும் இந்தச் சட்டத்தின் அதிகார வரம்பிற்கு உட்பட்டவர்கள்

### இயற்கை பாதுகாவலர்கள்

சட்டப்பூர்வமான ஆண் மற்றும் திருமணமாகாத பெண் குழந்தைகள் மற்றும் அவர்களின் சொத்துக்களுக்கு தந்தை முதன்மை பாதுகாவலர் ஆவார். அதே சமயம் தாய் இரண்டாம் நிலை பாதுகாவலர் ஆவார். இருப்பினும் ஐந்து வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் தாய் தான் சாதாரணமாக பாதுகாவலர். முறைகேடாக பிறந்த குழந்தைகளுக்கு, தாய் முதன்மை பாதுகாவலர். தந்தை இரண்டாம் நிலை பாதுகாவலர். திருமணமான ஒரு மைனர் பெண்ணின் கணவர் அவளுடைய பாதுகாவலராக மாறுகிறார். வளர்ப்பு மகனுக்கு, வளர்ப்புத் தந்தை முதன்மை பாதுகாவலர், பின்னர் வளர்ப்புத் தாய்.

ஒரு பெற்றோர் இந்துவாக இருப்பதை நிறுத்தினால் அல்லது சமயத்தைத் துறந்தால் அல்லது துறவியாகவோ மாறினால், அந்த பெற்றோர் தனது பாதுகாவலர் உரிமைகளை இழப்பார்கள்

### இயற்கை பாதுகாவலர்களின் திறன்கள்

இயற்கை பாதுகாவலர்கள் மைனர் குழந்தைகள் மற்றும் அவரது சொத்துக்களைப் பாதுகாக்கும் மற்றும் நன்மை பயக்கும் நடவடிக்கைகளை எடுக்கலாம். இருப்பினும், மைனருக்கான தனிப்பட்ட ஒப்பந்தங்களில் பாதுகாவலர் கையெழுத்திட முடியாது. பாதுகாவலர் சிறுவனின் அசையாச் சொத்தின் எந்தப் பகுதியையும் விற்கவோ, அடமானம் வைக்கவோ அல்லது கொடுக்கவோ, இந்தச் சொத்தை ஐந்து ஆண்டுகளுக்கு மேல் குத்தகைக்கு விடவோ அல்லது குழந்தைக்கு பதினெட்டு வயதுக்குப் பிறகு சொத்தை ஒரு வருடத்திற்கு மேல் குத்தகைக்கு விடவோ முடியாது.

### சிறார்களும் சொத்துக்களும்

ஒரு குழந்தையின் சொத்தின் பாதுகாவலராக மற்றொரு குழந்தை செயல்பட முடியாது. கூட்டுக் குடும்பச் சொத்தில் ஏற்கனவே அந்தக் குடும்பத்தில் உள்ள வயது வந்தோரால் கட்டுப்படுத்தப்படும் ஒரு குழந்தைக்கு ஒரு பாதுகாவலரை நியமிக்க முடியாது

### சிறார் நலன்

பாதுகாவலரை நியமிப்பதில் குழந்தையின் நலன் முதன்மையாகக் கருதப்படும்.



வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

# பண்ணைப் பயிற்சிப் பெற்றோம்! பசுமை நிலங்களை மீட்டோம்!

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், தொண்டைமான் ஊரணி ஊராட்சியில் உள்ள நாங்கள் நிலக்கடலை விவசாயம் செய்து வந்தோம். எங்கள் நிலத்தினில் போகத்திற்கு போகம் மகசூலின் அளவு மாறுபடும், அதற்காக நாங்கள் ரசயான உரங்களைப் பயன்படுத்தி வந்தோம். இதனால் எங்கள் விளை நிலங்களின் ஊட்டத்தன்மை குறைந்து வந்தது. இந்த சமயத்தில் எங்கள் கிராமத்தில் மேம்பாட்டுப் பணிக்கு வந்த தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் (TNRTP), எங்கள் நிலங்களைக் கண்டறிந்து ஆய்வு செய்தது. அதன் அடிப்படையில் எங்களின் நிலங்களின் ஊட்டத்தன்மையை மீட்டெடுக்கவும், அதிக மகசூலைக் கொண்டு வரவும் எங்களுக்கு பண்ணைப் பயிற்சி ஏற்பாடு செய்தது.

அதன் அடிப்படையில் சமுதாயப் பண்ணைப் பள்ளி, தொண்டைமான் ஊரணி ஊராட்சியில் உள்ள தெற்கு தொண்டைமான் ஊரணி குக்கிராமத்தில் தொடங்கப்பட்டது. எங்கள் கிராமத்தின் உற்பத்தியாளர் குழுவில் இருந்த 30 நபர்களுக்கு சமுதாயப் பண்ணைப் பள்ளிப் பயிற்சியானது வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் இயற்கை உரங்களைத் தயாரித்து நிலத்திற்கு இடுதல், நிலக்கடலை விவசாயத்தில் மகசூலை அதிகரித்தல், இயற்கை உரங்களின் உற்பத்தி செலவினங்களைக் குறைத்து வருமானத்தை பெருக்குவதற்கான வழிமுறைகள் குறித்த பயிற்சி வகுப்புகளை திரு. தங்கவேல் என்பவர் எங்களுக்கு வழங்கினார்.

பயிற்சியின் முக்கிய அம்சமாக மண் மாதிரி சேகரித்தல், மண் பரிசோதனை, நீர் பரிசோதனை ஆகியவைச் செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டன. மேலும், ஒவ்வொரு உழவருக்கும் மண் வள அட்டை வழங்கப்பட்டு, நிலத்தில் நிலக்கடலையுடன் பயிரிட வேண்டிய துணைப் பயிர்கள் குறித்த அறிவூட்டலும் வழங்கப்பட்டன. நாங்கள் பெற்றப் பயிற்சியின் அடிப்படையில் இயற்கை உரங்கள் மற்றும் தரமான உள்ளீடுகள் ஆகியவற்றை உள்ளிடுவதன் வழியாக எங்கள் நிலங்களின் ஊட்டத்தன்மை பாதுகாப்பப்பட்டு மாதிரி பண்ணைப் பள்ளியில் நிலக்கடலை நடவு செய்யப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, தற்போது குறைந்த செலவில் இயற்கை உரங்களை நாங்களே உற்பத்திச் செய்து, நிலக்கடலை செடிகளுக்கு இடுகிறோம். மேலும் தரமான மற்றும் அதிக மகசூலுக்காக செழுமையாக நிலக்கடலைப் பயிர்களை விளைவித்து வருகிறோம். அதிக மற்றும் தரமான நிலக்கடலை மகசூலை அடையவுள்ளோம்.





# கூடுதலாய் திறன் கற்றேன்! கூடுதலாய் வருவாய் பெற்றேன்!

**இ–சேவை மையம் நடத்தி வந்த வித்யா ஆரி ஒர்க் கற்று வாழ்வில் மேம்பட்டுள்ளார்!**

என் பெயர் வித்யா, என் கணவர் பெயர் ராமச்சந்திரன். நான் புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டாரம், நாகுடி ஊராட்சியில் வசித்து வருகிறேன். எனக்கு திருமணம் ஆகி 13 ஆண்டுகள் ஆகிறது. எனக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர். நான் கடந்த 4 ஆண்டுகளாக இ-சேவை மையம் நடத்தி வருகிறேன். நான் கடை வைத்திருப்பது கிராமமாக இருப்பதால் இ-சேவை மையம் மூலம் சரியாக வருமானம் வரவில்லை. அந்த நேரத்தில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் சமுதாயத் திறன் பள்ளியில் ஆரி ஒர்க் பயிற்சி அளிப்பதாக கேள்விப்பட்டு நானும் எனது பெயரைக் கொடுத்தேன். அத்தாணி ஊராட்சியில் ஆரி ஒர்க் பயிற்சி 30 நாட்கள் நடைபெற்றது.

பயிற்சியில் கலந்து கொண்ட எனக்கு ஆரி ஒர்க் ஃபிரேம் மற்றும் பயிற்சிக்கான உபகரணங்கள் கொண்ட பயிற்சிப் பெட்டகம் கொடுத்தார்கள். ஆரி ஒர்க் கைவேலைப்பாடுகளைக் கற்ற நான், ஆரி ஒர்க் மற்றும் இதர கைவேலைப்பாடு செய்து கொடுத்து நாளொன்றுக்கு ரூ. 3000/- முதல் ரூ. 5000/- வரையில் கூடுதலாக வருமானம் ஈட்டுகிறேன். இந்த வருமானம் குடும்ப செலவு, குழந்தைகளின் கல்வி மற்றும் அத்தியாவசிய செலவிற்கும் உதவுகிறது. என் வாழ்வில் வருவாய் ஒளியேற்றிய தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்திற்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



# தொழிற்திறன் பயிற்சியால் தொழில் வாய்ப்புகளைப் பெற்றோம்

ஊரகப் புத்தாக்கத் திட்டத்தால் தொழிற்பயிற்சி பெற்று, சுய தொழில் செய்து பொருளாதார வளர்ச்சி பெற்று வரும் கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டாரம் மேல புதுப்பேட்டையைச் சேர்ந்த தொழிற்குழுவினர் கூறுவதைக் கேட்போம் வாருங்கள்.

“ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட ஆய்வின் போது, வட்டார இலக்கு அணி எங்கள் கிராமத்தைக் கண்டறிந்தது. மேலும் எங்கள் கிராமத்தை சுற்றியுள்ள பல கிராமங்களில் அடிப்படை கல்வியைப் பயின்ற பெண்கள் அதிகம் உள்ளனர். ஆனால், அவர்களுக்கு போதுமான வேலைவாய்ப்புகள் இல்லை.

அந்த உண்மையைக் கண்டறிந்த ஊரகப் புத்தாக்கத் திட்டத்தினர், தொழில்சார் சமூக வல்லுநர்கள் வழியாக எங்களுக்கு கவரிங் நகைகளின் உற்பத்தி குறித்தும், சந்தையில் அவற்றுக்கு உள்ள தேவைகள் குறித்தும், அந்தத் தொழில் வல்லுநர்களுக்கு உள்ள வாய்ப்புகள் குறித்தும் எடுத்துரைத்ததுடன், மேலப்புதுப்பேட்டை மற்றும் பூதம்பாடி ஊராட்சிகளின் ஆர்வமுள்ள, 18 முதல் 35 வயதுள்ள 20 பெண்களை தேர்வு செய்து, சமுதாயத் திறன் பள்ளி வழியாக கவரிங் நகைத் தயாரிக்கும் பயிற்சியை வழங்கினர். மேல்புவனகிரியில் எல்லைக்குடி ஊராட்சியில் வசிக்கும் RSETI பயிற்றுநர் திருமதி மகேஷ்வரி அவர்கள் எங்களுக்கு 30 நாட்கள் கவரிங் நகைச் செய்யும் பயிற்சியை வழங்கினார். இப்பயிற்சியைப் பயின்ற நாங்கள் தப்போது கவரிங் நகைகள் செய்யும் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுள்ளோம்.

இதன் மூலம் மாதந்தோறும் கணிசமான வருவாய் பெற்று பொருளாதார வளர்ச்சி பெற்று வருகிறோம். எங்களுக்கு தொழிற்பயிற்சிகள் வழங்கி சுய தொழில் மேற்கொள்ள வாய்ப்பையும் ஏற்படுத்தித் தந்த ஊரகப் புத்தாக்கத் திட்டத்திற்கு எங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்” என்று மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர்.



# உஷாவின் சவால்கள் நிறைந்த வாழ்க்கை...

எனது பெயர் உஷா, ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த நான், 12ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். சில ஆண்டுகளுக்கு முன் திருமணம் ஆகி 3 பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகிறேன். எனது கணவர் மின் துறையில் கூலித் தொழிலாளியாக பணியாற்றி வருகிறார். அவருக்கு ஓரளவே வருவாய் கிடைத்து வந்தது. அந்த வருவாயில் இனிமேல் குடும்பம் நடத்த முடியாது என்பதை அறிந்த நான், தகுந்த நேரத்தில் ஒரு தொழிலைத் தொடங்கி வருவாய் ஈட்ட திட்டமிட்டேன். உடனே எங்கள் கிராமத்தில் செயல்பட்டு வந்த விநாயகர் சுய உதவிக் குழுவில் இணைந்து தொழில் தொடங்க கடனுதவிப் பெற்றேன். அந்த நிதியில் ஒரு சிறிய மளிகைக் கடை மற்றும் உணவகம் தொடங்கினேன். இந்தக் கடைகள் குறிப்பாக கிராம அளவில் உள்ள TNCSC-DPC நிறுவன லோடு ஊழியர்களைச் சார்ந்து நடத்தப்பட்டன. ஆனால், எதிர்பாராத விதமாக TNCSC-DPC நிறுவனம் மூடப்பட்டு எங்கள் கடையின் வருவாய் குறைந்து விட்டது. எனினும் இந்தக் கடைகளை மேம்படுத்தி நடத்த திட்டமிட்டேன். ஆனால், அதற்குப் போதிய நிதி இல்லாமல் அந்த தொழில்களை நிறுத்தி விட்டேன்.

### TNRTP திட்டத்தின் CSS பயிற்சி புது வழியைக் காட்டியது!

அதன் பிறகு, எங்கள் ஊராட்சியின் ECPயான மகேஸ்வரி மற்றும் மன்னார்குடி வட்டார BPMU ஆகியோர் வழியாக TNRTP திட்டத்தின் தொழில் விரிவாக்க கடனுதவி குறித்துத் தெரிந்து கொண்டேன். திட்டத்தின் மூலம் சமுதாயத் திறன் பள்ளி வழியாக தையல் தொழிற் பயிற்சியைப் பெற்றேன். கூடுதலாக யூடியூபிலும் பார்த்துப் பயின்றேன். அதன் பிறகு யோகேஷ் மகளிர் தையல் கடையைத் தொடங்கினேன். அதில் இரண்டு தையல்காரர்களுக்கு வேலை கொடுத்து நல்ல முறையில் நடத்தி வந்தேன். அந்தக் கடையை சற்று விரிவுப்படுத்த எண்ணியபோது, கையில் பணம் இல்லை.

### TNRTP திட்டத்தின் NEFF நிதியுதவி மேம்பாட்டை தந்தது!

எனவே, மதி சிறகுகள் தொழில் மையத்தை அணுகி, நுண் நிறுவன நிதித்திட்டம் (NEFF) கடனுதவிக்கும், MSME- UDYAM பதிவுக்கும் விண்ணப்பித்தேன். உரிய அனைத்து ஆய்வுகளுக்குப் பிறகு எனக்கு ரூ.70,000/- NEFF கடனுதவி கிடைத்தது. அந்த நிதியில் தொழிலை விரிவாக்கி, ரவிக்கை, சுடிதார், பேண்ட், சட்டை போன்ற ஆடை வகைகளைத் தைத்துத் தருகின்றேன். அதன் மூலம் எனக்கு ரூ.30,000/- முதல் ரூ.35,000/- வரை மாத வருவாய் வருகின்றது. என் கடையில் வேலை செய்யும் தையலருக்கு மாதம் ரூ.7000/- வரை வருவாயும் கிடைக்கிறது. வரும் காலத்தில் ஆரி எம்பிராய்டரி தொழில் நுட்பத்தையும் கடையில் கொண்டு வந்து, மன்னார்குடி வட்டாரத்தில் கிளைக் கடைகளைத் தொடங்கி பலருக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்கவுள்ளேன்.





# சிக்கன வழிமுறைகளைக் கற்று
# இலாபமான முறையில் விவசாயம் செய்கிறோம்!

### ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் முதல் உதவி!

கடலூர் மாவட்டம், குமராட்சி வட்டாரம், சி. அரசூர் ஊராட்சியில் ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் ஆதரவில் தொடங்கப்பட்ட எங்கள் உழவர் உற்பத்தியாளர் குழு சிறப்பாக இயங்கி வருகின்றது. எங்கள் உற்பத்தியாளர் குழுவிற்கு திட்டத்தின் முதற்கட்ட ஆதரவாக, கோவிட்-19 சிறப்பு நிதியுதவித் தொகுப்பின் மூலம் 1.5 இலட்சம் வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட நிதியின் மூலம் பண்ணை இயந்திரம் (Power Tiller) கொள்முதல் செய்யப்பட்டது. அந்த இயந்திரத்தை எங்கள் உற்பத்தியாளர் குழுவில் உள்ள உறுப்பினர்களுக்கு குறைந்த வாடகையில் பயன்பாட்டிற்கு எடுத்துப் பயன்படுத்தி வருகிறோம். இதன் மூலம் உழவர்களான நாங்கள் சரியான பருவத்தில் பருத்தி சாகுபடி செய்து பயனடைந்து வருகின்றோம்.

### சமுதாயப் பண்ணைப் பள்ளிப் பயிற்சி வழங்கப்பட்டது!

எங்கள் உற்பத்தியாளர் குழுவிற்கு இரண்டாவது பெரிய உதவியாக, சமுதாயப் பண்ணைப் பள்ளி அமைத்து, குழுவிலுள்ள விவசாயிகளுக்கு பருத்தி சாகுபடி மற்றும் அறுவடைக்குப் பிந்தைய தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சி நான்கு மாதங்கள் வழங்கப்பட்டது. அதில் பருத்தி சாகுபடியில் உள்ள நவீன தொழில்நுட்ப முறையில் சொட்டுநீர் பாசன முறை மற்றும் இயற்கை உரமிடுதல், விதை நேர்த்திச் செய்தல் போன்ற பயிற்சிகள் சமுதாயப் பண்ணைப் பள்ளி மூலம் வழங்கப்பட்டுள்ளது.

### சிக்கன வழிமுறைகளைக் கற்று இலாபமான முறையில் விவசாயம் செய்கிறோம்!

இதில் பயிற்சிப் பெற்ற எங்கள் குழுவின் விவசாயிகள் தற்பொழுது சொட்டுநீர் பாசனம், தெளிப்பு நீர்ப் பாசனம், மழைத்தூவான் ஆகியவற்றை பயன்படுத்தி விவசாயம் செய்து, பருத்தி சாகுபடியில் அதிக மகசூல் அடைந்துள்ளனர். பயிற்சியின் மூலம் மண் பரிசோதனைக் குறித்துத் தெரிந்து கொண்டு, மண்ணிற்கு தேவையான இயற்கை உரத்தினை மட்டும் இட்டு, உரத்திற்கான செலவினை குறைத்துள்ளனர். இடுபொருள் செலவினையும் குறைத்து உற்பத்தியை அதிகரிப்பதற்கு நாங்கள் கற்றுக் கொண்டோம். எங்கள் பருத்தி விவசாயத்தை இலாபகரமான விவசாயமாக மாற்றிய ஊரகப் புத்தாக்கத் திட்டத்திற்கு பெரும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


உறுப்பினர்கள்,<br>
சி. அரசூர் உழவர் உற்பத்தியாளர் குழு,<br>
சி. அரசூர் ஊராட்சி, குமராட்சி வட்டாரம்<br>
கடலூர் மாவட்டம்







சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட
## முற்றம் படியுங்கள்!

முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட உங்களின்
## ஆதரவை தாருங்கள்!







முற்றத்திற்கு சந்தா
## செலுத்திடுங்கள்!

புத்தகத்தைப் படிக்க என்னை
## Scan செய்யவும்

| முற்றம் இதழின் சந்தா விபரம் | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 240/- |
| இரண்டு ஆண்டு | ரூ. 450/- |
| மூன்று ஆண்டு | ரூ. 680/- |

| விளம்பரக் கட்டணம் | |
|---|---|
| அட்டையின் 2-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் 3-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் பின்பக்கம் | ரூ. 50,000/- |
| புத்தகத்தின் உள்பக்கம் | ரூ. 35,000/- |

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை முற்றம் (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

**வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம். சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும்.**

விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி

**முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,**

அன்னை தெரசா மகளிர் வளாகம், 1வது மாடி, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

# பழைய சாத பணியாரம்

நம்மில் பலரின் வீட்டிலேயும் மதியம் சமைத்த சாதம் மீதம் இருந்தால் அந்த சாதத்தை வைத்து என்ன செய்வது என்று தெரியாமல் அதனை வீணாக்கி விடுவோம். ஆனால் இனிமேல் அப்படி மீதமுள்ள சாதத்தை வீணாக்க வேண்டாம். ஏனென்றால் மீதமுள்ள சாதத்தை வைத்து மிகவும் ருசியான பணியாரம் செய்வது என்பதை பற்றி இந்த பதிவில் காணலாம்.



**தேவையான பொருட்கள் :**

சாதம் 2 கப், ரவை 1 கப், அரிசிமாவு 2 டேபிள்ஸ்பூன், வெங்காயம் 2, கேரட் 2, கொத்தமல்லி 1 கைப்பிடி, எண்ணெய் மற்றும் உப்பு தேவையான அளவு, தண்ணீர் 1 1/2 கப்

**செய்முறை:**

முதலில் வைத்துள்ள வெங்காயம், கேரட், கொத்தமல்லி ஆகியவற்றை நன்கு பொடி பொடியாக நறுக்கி வைத்துக் கொள்ளுங்கள். பின்னர் ஒரு மிக்சி ஜாரில் 2 கப் சாதத்தை சேர்த்து அதனுடன் 1/2 கப் தண்ணீரை ஊற்றி நன்கு அரைத்துக்கொள்ளுங்கள்.

அரைத்த அந்த சாதத்தை ஒரு பாத்திரத்தில் வைத்து அதனுடன் 1 கப் ரவை, 2 டேபிள் ஸ்பூன் அரிசிமாவு மற்றும் தேவையான அளவு உப்பு ஆகியவற்றை சேர்த்து நன்கு கலந்து கொள்ளுங்கள். பிறகு இதனை 1/4 மணிநேரம் அப்படியே ஊற வைத்துக் கொள்ளுங்கள்.

1/4 மணி நேரத்திற்கு பிறகு அது நன்கு ஊறி பணியார மாவு பதத்திற்கு மாறிவிடும். இப்போது அந்த மாவுடன் நாம் முன்பே பொடி பொடியாக நறுக்கி வைத்துள்ள வெங்காயம், கேரட், கொத்தமல்லி ஆகியவற்றையும் சேர்த்து நன்கு கலந்து கொள்ளுங்கள். இப்போது நமது பணியாரமாவு தயார் ஆகிவிட்டது.

அதன் பிறகு அடுப்பினை மூட்டி பணியார சட்டியை அதில் வைத்து அதில் தேவையான அளவிற்கு எண்ணெய் ஊற்றி கொள்ளுங்கள். பின்னர் அதில் நாம் தயார் செய்து வைத்துள்ள பணியார மாவை கொஞ்சம் கொஞ்சமாக ஊற்றிக் நன்கு முன்னும் பின்னும் பிரட்டி வேகவைத்து அதை எடுத்து அனைவருக்கும் பரிமாறுங்கள். மிகவும் சுவையான இந்த பணியாரத்தை பெயிவர் முதல் சிறியவர் வரை அனைவரும் விரும்பி சாப்பிடுவார்கள்.

## பயனுள்ள சிறு குறிப்புகள்

**சர்க்கரை நோயை கட்டுக்குள் வைக்கக் கூடிய நெல்லிச்சாறு**

பெரிய நெல்லிக்காய் 1, மஞ்சள்தூள் - 1 டீஸ்பூன், வெந்நீர் - 300 மிலி ஆகியவற்றை எடுத்துக் கொள்ளுங்கள். நெல்லிக்காயை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி, மிக்ஸி ஜாரில் போட்டு, 1 டீஸ்பூன் மஞ்சள் தூள் மற்றும் சிறிதளவு வெதுவெதுப்பான தண்ணீர் சேர்த்து நன்கு அரைத்து எடுத்து கொள்ளுங்கள். அதனுடன் 300 மிலி அளவிற்கு சூடான தண்ணீர் சேர்த்து நன்கு கலந்து வடிகட்டி காலையில் வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். தினமும் இவ்வாறு குடித்து வந்தால் சர்க்கரை நோய் கட்டுக்குள் வரும்.

இந்த நெல்லிச்சாறு சர்க்கரை நோயினால் உண்டாகும் உடல் அசதி, பலவீனம், கண் பிரச்சனைகள், சிறுநீரக பிரச்சனைகள், நரம்புகளில் உள்ள பிரச்சனைகள், மன அழுத்தம் போன்றவற்றை குறைப்பதுடன், புற்றுநோய் மற்றும் ஒவ்வாமைகளைத் தடுக்க உதவுகிறது. பாதங்களில் வலி, எரிச்சல் போன்றவற்றையும் குணப்படுத்துகிறது. எல்லாவற்றிக்கும் மேலாக சர்க்கரை அளவை குறைத்து கட்டுக்குள் வைக்கிறது.

Published by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY from Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by B. RAJKUMAR, RASI GRAPHICS PRIVATE LTD, 40.Peters Road, Royapettah, Chennai - 600014. Published from (1,25,000 Copies Circulated)Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034, Editor : S. CHINNAPPAN.

முறுக்குச் செயின் தாளிக்கொடி

# கவரிங் நகைகளில், கலைநயம் படைக்கிறோம்!

உங்கள் கடைகளுக்கு மொத்தமாகக்
கொள்முதல் செய்ய தொடர்புகொள்ளவும்:

**+91 86084 35098**
**+91 86088 76047**



தொழில் முனைவோர்: **D.தங்கம்**
நிறுவனம்: **மங்கை தொழிற்குழு**
உற்பத்தி: **கவரிங் நகை (முறுக்குச் செயின் தாளிக்கொடி)**
ஊராட்சி: **குருடம்பாளையம்**
வட்டாரம்: **பெரியநாயக்கன்பாளையம்**
மாவட்டம்: **கோயம்புத்தூர்**







## தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
5வது தளம், திருவிக தொழிற்பேட்டை, சிட்கோ தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை- 600032, தமிழ்நாடு
(044) 434 43200 tnrtpstate@gmail.com www.vkp-tnrtp.org VKPTNRTP VKP_TNRTP VKP_TNRTP

RNI NO .TNTAM/1999/02733 - TAMIL NADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS.1569 / 2023
Reg.No. TN/CH/(C)/455/2024-2026 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2024-2026
Date of Publication : 1st Week of the every month Posted between 8th – 14th May 2024 Posted at Patrika Channel, Egmore.

TNULM
TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION
*Empowering Lives*

தெருவோரம் சட்டிப்பானை வித்த காலம் மாறி இப்ப
ஷாப்பிங் மால்லயும், Online- லயும் வித்துக்கிட்டிருக்கோம்.
இந்த மாற்றத்திற்கு காரணம்
எங்கள் குழு தந்த தன்னம்பிக்கையும், துணிச்சலும் தான்.









எப்போது நீங்கள் மற்றவருக்கு உதாரணமாக திகழ்கிறீர்களோ அப்போது தான்
தன்னம்பிக்கை உடைய வெற்றியாளராக ஆகிறீர்கள்.

மேலும் விவரங்களுக்கு

**வாழ்வாதார உதவி அழைப்பு எண்**
**155 330 ல் தொடர்பு கொள்ளவும்**